223467.

JL
Y31m N27GR
N27.2.2
223467

890

Regd. No. M. 1930 ஓம் வந்தேமாதரம். Annual Subscription Rs. 2

கிராமானுகூலன்.

GRAMANUKOOLAN.

[ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.]

KUMBAKONAM.

புத்தகம் 2 | 1927௵ அக்டோபர்—நவெம்பர்௴ பிரபவ௵ ஐப்பசி௴ | ஸஞ்சிகை 2

சந்தா விபரம்.

உள்நாட்டுக்கு வருட சந்தா [தபாற்கூலி உள்பட] ... ரூ 2 0 0
வெளிநாடுகளுக்கு ,, ,, 2 8 0
தனிப்பிரதி ,, ,, 0 3 0

விஷய சூசிகை.

		பக்கம்
1. ராயல் கமிஷன்	(பத்திராதிபர்)	9
2 தஞ்சைஜில்லா மிராசுதாரர்கள் சங்கம்	,, ...	10
3. கிராமாந்திரங்களில் முனிசிபல் அதர்மவரி	,, ...	10
4. கர்ணங்களின் மகஜர்	,, ...	11
5 கிராம உத்தியோகஸ்தர்கள் மகாநாடு	,, ...	12
6. இந்திய ஆக்ஷிமுறை (ஓர் இந்தியமாணவர்)	....	13
7. கிராம உத்தியோகஸ்தர்கள்	,, ...	17
8 கிராம உத்தியோகஸ்தர்கள் மசோதா ஆக்ட்	,, ...	22
9. தென் இந்தியக்கோயில்கள் (ஸ்ரீமான் பி. வி ஜெகதீசய்யர்)	....	23
10. தற்கால நிலைமை (ஓர் சம்பாஷணை) (ஸ்ரீமான் இராஜகோபால அய்யங்கார்)	....	24
11. மதுரமாளிகை (ஓர் நாடகம்) (ஸ்ரீமான் S. S. இராஜகோபாலய்யங்கார் B.A., B.L.)	...	26
12. தொண்டர் (ஸை. சா வேங்கடராமய்யர்)	...	29
13. பர்மா மாகாணத்தில் கிராமத் தலைவர் வரும்படி	...	31
14. கிராமஉத்தியோகஸ்தர்களுக்கு இடவசதி	,, ...	31
15. விளம்பரங்கள்	... ...	32

விளம்பர விகிதம்.

பக்கம் 1க்கு [2-காலம்] ரூ 1க்கு ரூ. 10 | காலம் ½க்கு ரூ 1க்கு
பக்கம் ½க்கு [1-காலம்] ,, 5 | இதக்க 1க்கு ,,
நீடித்த விளம்பரங்களுக்கு பரிசோதனைக்கேற்றபடி தெரிந்துகொள்ளவும்

N. அப்பஸ்வாமி ஐயர்—பத்திராதிபர்.

மருதாந்தநல்லூர்—திப்பராஜபுரம் போஸ்டு.

கிராமானுகூலன்.

ஆதரணைக் கர்த்தர்.

ஸ்ரீமான் H. வெங்கட்டராம ஐயர் அவர்கள்,

கிராமானுகூலன்.

சந்தா விபரம்.

போஷகர்களுக்கு வருஷம் 1-க்கு	ரூ.	50	0	0
அபிமானிகளுக்கு ,,	....	15	0	0
ஜீவிய சந்தா	....	25	0	0
வருடசந்தா இந்தியா, பர்மா, சிலோன்.	...	2	0	0
அயல்நாடுகளுக்கு (சிங்கப்பூர் பினாங்கு, மோரீஸ், நேட்டால்)	....	2	8	0

பத்திரிகாபிமானிகள் போஷகர்களாகவும் அபிமானிகளாகவும், ஜீவிய சந்தாதார்களாகவும் சேர்ந்து ஆதரிக்கவேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்.

நல்ல லாபம்.

நமது கிராமானுகூலனுக்கு மூன்று சந்தாதார்களை சேர்த்து முன்பணமாக ரூபாய்-6 மணியார்டர் செய்பவர்களுக்கு ஒரு வருஷத்துக்கு கிராமானுகூலன் பத்திரிகை இனாமாக அனுப்பப்படும். அதற்குமேல் சேர்த்துக் கொடுப்பவர்களுக்கு தகுந்த கமிஷனும் கொடுக்கப்படும்.

[illegible]ர்,
கிரா[illegible]னுகூலன்

உ

ரிஜிஸ்டர் நெ M. 1939] வந்தேமாதரம். [வருட சந்தா ரூபா 2—0—0

கிராமானுகூலன்.

[ஒரு மாதாந்த தமிழ்ப் பத்திரிகை.]

"ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெதுவேண்டும்"—பாரதி.

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."—ஔவை

புத்தகம்		சஞ்சிகை
2	பிரபவஹூ ஐப்பசிமீ	[illegible]

MADRAS
223467

ராயல் கமிஷென்.

—:x:—

இந்திய அரசியல் விசாரணைக் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. அதுதான் இந்தியாவின் தலையில் எழுதவேண்டுமாம். அதில் 7 பிரிட்டிஷார் மெம்பர்கள். இந்தியருக்கு ஒரு ஸ்தானம்கூட கிடையாதாம். அதில் தலைவர் ஜான்ஸைமன் என்பவரைத் தவிர மற்றவர்களின் பெயர் இங்கிலாந்திலேயே சரியாகத் தெரியாதாம். இந்தியாவை இவ்வளவு கேவலமாக அவமதித்தது இதுவரையில் கிடையாது. கன்சர்வேட்டிவ் கெவர்ன்மெண்டார் ஆட்சிகாலத்தில் நாம் வேறு நன்மைகள் எதிர்பார்க்க முடியாது. தாங்கள் புத்திசாலிகள் என்று பிரமாதமாக பேசிக்கொள்ளும் அவர்கள் இவ்வளவு பிற்போக்கான நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு காரணம் அவர்களுடைய ஆட்சிகாலம் இத்தடவையோடு முடிந்துவிடுமென்ற எண்ணத்தினால் தடுமாறிப்போய்விட்டார்கள் போல் காண்கிறது.

லார்டுகர்ஸன் ராஜப்பிரதிநிதியாகயிருந்தகாலத்தில் வங்காளப் பிரிவினையைச்செய்து இந்தியாவின் கண்ணைத்திறந்துவிட்டார். அதுமுதல் இந்தியாவில் சுதந்திரம், சுதேசியம், [illegible]ம் தாண்டவமாட ஆரம்பித்தது. இப்[illegible]ப்புச் சச்சரவுகள் வலுத்து இந்தியாவில் ஒற்றுமை குறைவாயிருக்கிறதென்று எண்ணி லார்டு [illegible] இந்தியரை அடியோடு பஹிஷ்கரித்து ஒரு கமிஷனை நியமித்து இந்தியாவை அவமானத்திற்குள்ளாக்கியிருக்கிறார் இதிலிருந்தே இந்தியாவிலுள்ள வகுப்புச் சச்சரவுகள் ஒழிந்துபோக காலம் வந்துவிட்டதென்றே ஏற்படுகிறது. என்ன ஆயிரம் மனஸ்தாபங்கள் குடும்பங்களிலிருந்தபோதிலும் வெளிக்கு காட்டிக் கொள்ளமுடிகிறதா? அதேபோல நமக்குள் எவ்வளவு பூசல்கள் இருந்தபோதிலும் முக்கியமான இந்தியாவின் சுயராஜ்ஜிய விஷயத்தில் அதைக் காட்டிக் கொள்வோமா ஒருபோதுமில்லை. இது இந்தியாவின்கண்ணை பிரகாசப்படுத்திவிட்டதாக கொள்வோமாக. இனி பிறர்கையை எதிர்பார்த்து சுயராஜ்ஜியம் அடைந்துவிடலாம் என்பது பகற்கனவேயாகும். "தன்னையே தனக்குதவி" யென்ற கொள்கையை அனுசரித்து "ஒன்றுபட்டாலுண்டுவாழ்வு" என்பதை உணர்ந்து வகுப்புச் சச்சரவுகளை அடியுடன் மறந்து ஒரே உறுதியாக நின்று சுயராஜ்ஜியம் அடைந்தே தீருவோமென்று சபதம் செய்து கொண்டு அஹிம்ஸா தர்மத்திலும் ஒத்துழையாமையிலும் பூர்ணநம்பிக்கைவைத்து எல்லோரும் முன்வந்துழைக்கவேண்டும். இந்த கமிஷனை அடியோடு பஹிஷ்கரித்துவிடுவதுடன் பிரிட்டிஷ் சாமான்

பகிஷ்காரத்துக்கும் தீவிரமான ஏற்பாடுகள் செய்ய வேண்டும். நமது பழய தலைவர்களான மிதவாதிகள் கூட இந்த கமிஷனை பஹிஷ்கரிக்க நிர்மானித்து விட்டார்கள். இந்த கமிஷன் இனி திருத்தியமைக்கப்பட்டாலும் சரியே. இனி தொழிற்கட்சியார் ஆட்சிக்கு வந்தபோதிலும் சரியே. இந்தியாவிற்கு சுயராஜ்ஜியம் அவர்களாக அளித்துவிடுவார்களென்று நம்பவேண்டுவதில்லை.

இனி மிதவாதிகளும் பிரிட்டிஷாரின் வாக்குறுதியை நம்பமாட்டார்கள். இந்த சீர்திருத்தம் வழங்கப்பட்டதிலிருந்து எட்டுவருஷகாலத்தில் இருந்த வரிப்பளுவானது ஒன்றுக்கு ஒன்னரையாக உயர்ந்துவிட்டது. ஸிவில் சர்வீஸ் உத்தியோகஸ்தர்களின் சிலவோ ஒன்றுக்குஇரண்டாக உயர்ந்துவிட்டது. வகுப்புச்சச்சரவுகள் உண்டாக இடங்கொடுத்து விட்டது. சாதாரண பேர்வழிகளெல்லாம் தங்களை பெரியவர்களாக தானே மதித்துக்கொள்ள இடங்கொடுத்து விட்டது. பொது ஜனங்களுக்கு நன்மையான காரியம் ஒன்றுமே கிடையாது. ஆகையால் இந்தியரை பெரும்பான்மையோராக நியமித்தாலுங்கூட இந்த கமிஷனால் சரியான பரிகாரம் கிடைக்கமாட்டாது. இதை அடியுடன் பஹிஷ்கரித்து விடவேண்டியதே இந்தியாவின் கடமையாகும்.

தஞ்சை ஜில்லா மிராசுதார்கள் சங்கம்

திருச்சிறுப்பள்ளி ஜில்லாவில் மிராசுதார்கள் சங்கம் ஸ்தாபித்துக்கொண்டு அதற்கு நிரந்தர உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப்பட்டு எப்பொழுதும் வேலைசெய்து வருகிறது. அதனால் அந்த ஜில்லாவுக்குள்ள குறைபாடுகள் அப்போதைக்கப்போது பரிகரிக்கவேண்டிய மார்க்கங்கள் தேடப்பட்டுவிடுகின்றன. அதேபோல் தஞ்சைஜில்லாவிலும் ஒருமிராசுதார் சங்கம் நிரந்தரமாகயிருக்கவேண்டியது அவசியமாகிறது. மிராசுதார்களுக்கு குறைகளில்லாத நாளே கிடையாது. நிலவரி, வஜா, ஊற்றுத்தீர்வை, நீர்பாசனம், மரத்தீர்வை, கல்வரி முதலிய விஷயங்களைப்பற்றி கெவர்ன்மெண்டாராலும் ரெவினியூ போர்டாராலும், கலெக்டராலும் அடிக்கடி செய்யும் ஜி. ஓ க்கள், போர்டுப்ரொசிடிங்ஸ், கலெக்டர்ஸ்டாண்டிங் ஆர்டர் சர்க்குலர் என்று முறையேவழங்கும் உத்தரவுகளின் விபரம் மிராசுதார்களை எட்டுவதேயில்லை. அதிலுள்ள குணதோஷங்களை தெரிந்து அப்போதைக்கப்போது கெவர்ன்மெண்டாருக்கு மறுத்தெழுதிவந்த காலஞ்சென்ற திவான்பகதூர் ஆர். ரெகுநாதராயர் அவர்களைப்போல் இப்பொழுது ஒருவரும் எழுதுவதில்லை. ஆகையால் இவ்விஷயங்களை உடனுக்குடனே கவனித்து அதை மிராசுதார்களுக்கும் அறிவித்து மேலாவுக்கும் எழுதி தகுந்த நடவடிக்கைகளை அப்போதைக்கப்போது செய்யவேண்டியதற்கு நிரந்தரமாகவும் விஷயம் தெரிந்தவராகவுமுள்ள ஒரு உத்தியோகஸ்தருடன் (மானேஜர் அல்லது செக்ரிடரி) கூடிய சங்கம் ஏற்படவேண்டியது அவசியமாகும். இதைப்பற்றி நிலவரிப்பளு விஷயமாய் நடந்துகொண்டிருந்த விவாதம் சட்டசபையில் சுயேச்சைக் கக்ஷியாரும் மந்திரிகளும் நடந்துகொண்ட மாதிரியிலிருந்து தோற்றுப்போனவுடன் அயர்ந்திருப்பதுபோலிராமல் உடனே தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு அதற்குவேண்டிய மூலதனத்துடன் தஞ்சைஜில்லாமிராசுதார்கள்சங்கம் என்று ஒன்றைஏற்படுத்தி அதைரெஜிஸ்டர் செய்து விடவேணுமாயும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

கிராமாந்தரங்களில் முனிசிபல் அதர்மவரி.

கும்பகோணம் முனிசிபல் சபைக்கு சேர்மனாக சுயராஜ்ஜியக்கக்ஷியைச்சேர்ந்த ஸ்ரீமான் என். திருவேங்கடத்தய்யங்கார் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் அவர் பொதுஜன நன்மையை நாடுபவர், இப்பொழுது சபையிலும் சுயராஜ்ஜிய கக்ஷிக்கு மெஜாரிட்டியிருக்கிறது யாராவது ஒரு கவுன்ஸிலர் முனிசிபல் ஆக்ட் 249வது செக்ஷன்படி முனிசிபல் எல்லைக்கு வெளியில் கிராமாந்தரங்களில் விதிக்கப்பட்டுவரும் வரியை ரத்துசெய்துவிடலாமென்று ஒரு தீர்மானம் முனிசிபல் சபையில் கொண்டுவந்து அதை நிறைவேற்றி இந்த அதர்மவரியை கும்பகோணம் முனிசிபாலிடி சம்மந்தப்பட்ட வரையில் ஒழித்துவிடுவார்களென்று நம்புகிறோம்.

கர்ணங்களின் மகஜர்

மன்னார்குடி தாலூகா கிராம கர்ணங்கள் சங்கம் ஒன்று ஏற்படுத்திக்கொண்டு அதன் சார்பாக நிர்வாகசபை மெம்பர் கனம் மார்ஷ்பாங்குக்கு ஒரு மகஜர் அனுப்பியிருக்கிறார்கள். அதன் நகல் நமக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதில் குறைந்த பக்ஷம் 30 ரூபாய் சம்பளம் கொடுக்கவேண்டுமென்றும் ஜமாபந்தி படியை நிறுத்தாமல் கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதுவரையில் கொடுத்ததை திரும்ப பிடுங்கிக்கொள்ளும் வழக்கம் யாரும் கேள்விப்பட்டிருக்க முடியாது. இந்த கெவர்ன்மெண்டில்தான் அதுவும் கிராம உத்தியோகஸ்தர்களிடம்தான் கொடுத்ததை பிடுங்கிக்கொண்டார்கள். இது விசித்ரமேயாகும். அத்துடன் பிரித்தாளும் தந்திரத்தையும் கையாண்டுவிட்டார்கள். கர்ணங்களுக்கு 14-ரூபாயாகவும் கிராமுன்சீப்புகளுக்கு 13-ரூபாயாகவும் செய்துவிட்டார்கள். இரண்டு உத்தியோகமும் சம அந்தஸ்துள்ளதென்றும் ஒருவருக்கொருவர் கீழ்ப்பட்டவரல்லவென்றும் ஸ்தாபிப்பதற்காக 1921-ம் வருஷத்தில் சங்கங்கள்பட்டபாடும் அடைந்த கஷ்டநஷ்டங்களும் கொஞ்சமல்ல. கிராம முன்சீப்புகளின் சம்பளத்தை 15-ரூபாயாக கர்ணங்களுக்கு சமமாக செய்யவேண்டுமென்று கர்ணம் கிராமுன்சீப்புகள் சேர்ந்து கும்பகோணம், பாபநாசம் இரண்டு தாலுக்காவிலும் வேலைநிறுத்தம்செய்து போராடினார்கள். அதன்பயனாக கிராமுன்சீப்புகளின் சம்பளம் உயர்த்தப்பட்டது. ஆனால் அதற்காக மும்முரமாய் நியாய வரம்பிற்குட்பட்டு போராடிய கர்ணங்களில் பத்திராதிபர் ஸ்ரீமான் ஆபத்ஸகாய அய்யர் உள்பட ஐந்து கர்ணங்களையும் ஒரு கிராமமுன்சீப்பையும் வேலையைவிட்டு நீக்கிவிட்டார்கள். அச்சமயம் கும்பகோணம் டிவிஷனல் ஆபீஸராயிருந்த ஸ்ரீமான் S. ரெங்கசாமி அய்யங்காரவர்கள் பப்ளிக் ஹாலில், கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கத்தின் டெபுடேஷனை வரவேற்று, வேலைநிறுத்தத்தைரத்து செய்துகொள்ளும்படியும், தனக்கு மிகவும் கஷ்டமாயிருப்பதாயும் தானேமேலாவுக்கு சம்பளத்தைப் பற்றியும் குறையை நிவர்த்திப்பதைப்பற்றியும் சிபார்சு செய்வதாயும் வேலைநிறுத்தத்தில் சம்பந்தப்பட்டிருந்தவர்கள் ஒருவரையும் ஒன்றும் செய்யவில்லையென்றும் உறுதியாய் வாக்களித்துவிட்டு இப்பால் சில மாதங்களில் தான் மாற்றலானவுடன் நேரில் கூப்பிட்டு முகாந்திரம் கேட்காமலும் பேப்பர்பேரில் டிஸ்மிஸ் உத்தரவு போட்டுவிட்டு ஜில்லாவைவிட்டுப்போய்விட்டார். கிராமமுன்சீப்புகளின் சம்பளம் 15 ரூபாய் ஆனதற்கு பத்திராதிபர் வேலை இழந்ததோடு இன்னும் 4 கர்ணங்களும் வேலையிழந்தார்களென்பதை இச்சமயத்தில் ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது. இதனால் கிராம முன்சீப்புகளின் விஷயமாய் மகஜரில் சொல்லப்பட்டிருக்கிற பாகங்களை நாம் ஒப்புக்கொள்ளக்கூடவில்லை என்பது விளங்கும். "ஒன்றுபட்டாலுண்டுவாழ்வு" என்பதை மனதில் கொண்டு விடா முயற்சியுடன் பாடுபட்டுவந்தால் சரியான சம்பளம் கொடுக்காமல் தீராது என்று தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

கிராம உத்தியோகஸ்தர்கள் பரம்பரை மசோதா.

ஸ்ரீமான் S. முத்தையா முதலியாரால் கொண்டுவரப்பட்ட ஷை மசோதா சென்னை சட்டசபையில் முதல்தடவை படிக்கப்பட்டு பாஸாகி தனிக்கமிட்டிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

கௌரவ உத்தியோகமா?

முசிறி டிவிஷனல் ஆபீஸர் லாலகுடி முகாம் செய்திருந்தபொழுது ஷை ஊர் கிராம முன்ஸீப் ஸ்ரீமான் என். கிஷ்ணசாமி அய்யர் போய் பார்க்கவில்லையென்பதற்காக கொச்சியம் முகாமில் வரவழைத்து விசாரித்து ரூ 1 அபராதம் விதித்திருக்கிறார். இதுதானா கௌரவ உத்தியோகம். கெவர்ன்மெண்டு ஜி. ஓவில் மரியாதையாக நடத்தவேண்டுமென்பதற்கு அடையாளமோ?

கிராம உத்தியோகஸ்தர்களின் மகாநாடு

பரமக்குடியில் கூடிய ஷெ மகாநாட்டின் நடவடிக்கைகளையும், அக்கிராஸனர் பிரசங்கத்தையும் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. ஷெ மகாநாட்டை நடத்திவைப்பதற்கு மூலபுருஷராயும் உபசரணைகமிட்டிச் சேர்மனாகவும் மாகாணச்சங்கத்தின் தலைவராகவுமுள்ள கூடங்குளம் ஸ்ரீமான் பி. சுப்பையாபிள்ளை விடாமுயற்சியுடனும் மிகுந்த ஊக்கத்துடனும் இம்மகாநாட்டை மிகவும் சிறப்பாக நடத்திவைத்திருக்கிறார். சுமார் 1000 கிராம உத்தியோகஸ்தர்களுக்கு மேல் விஜயஞ்செய்திருந்தார்கள் என்றுகேள்விப்பட மிகுந்த சந்தோஷமுண்டாகிறது. கிராம முனிசிப்புகள் ஜாஸ்தியாக வந்திருந்தும் கர்ணங்கள் சம்மந்தப்பட்டவரையில் நிறைவேற்றியிருக்கும் தீர்மானங்களைப்பார்க்க மிகுந்த திருப்தியேற்படுகிறது. இதினால் கர்ணம் கிராம முன்சீப்புகளிடையே துவேஷபுத்தியுண்டாகவில்லை யென்பது நிதர்சனமாகிறது. கமிட்டிகளிலும் நிர்வாகசபையிலும் கிராமமுன்சீப்புகளே அதிகமாயிருப்பதைப்பற்றி சிறிது அதிருப்திபட இடமிருப்பதையும் நிவர்த்தித்து விடுவார்களென்று நம்புகிறோம். அக்கிராஸனர் ஸ்ரீமான் L. K. துளசிராம் B. A, B. L, அவர்கள் செய்திருக்கும் அருமையான பிரசங்கத்தை ஒவ்வொரு கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் காண்பிக்கவேணுமாயும் சங்கத்தின் விஷயங்களை முக்கியமான காரியமாய் பாவித்து ஒற்றுமையுடன் நடந்துவரவேண்டுமாயும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

விஞ்ஞாபனம்.

நமது கிராமானுகூலன் பத்திரிகை ஆவணியீ பிரசுரஞ்செய்வதாக பிரிண்டுசெய்துமுடிந்து காலத்தில் போஸ்டு செய்வதற்கு வழக்கம்போல் தபால் ஆபீஸ் போனதில் போஸ்டுமாஸ்டர் ஜெனரலிடமிருந்து ஏற்கனவே ரெஜிஸ்டராகியிருந்தாலும் மறுபடியும் உத்தரவுவேண்டுமென்று சொல்லப்பட்டதின்பேரில் மறுபடியும் போஸ்டுமாஸ்டர் ஜெனரல் அவர்களுக்குள்முதி கடித போக்குவரத்துகள் நடந்து உத்தரவு தினே தினே எதிர்பார்த்துக்கொண்டிருந்தும் இப்பொழுதுதான்கிடைத்தபடியால் புரட்டாசி மாதம் சஞ்சிகை பிரசுரிக்கவில்லை. ஐப்பசிமாத சஞ்சிகையை 2வது நம்பராக வெளியிட்டு இத்துடன் சேர்த்து அனுப்பியிருக்கிறோம். கார்த்திகை மாதமுதல் காலந்தவராது சஞ்சிகை வெளிவருமென்று தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

பத்திராதிபர்.

நன்கொடை.

சாக்கோட்டை கர்ணம் ஸ்ரீமான் S. M. ராஜகோபாலய்யங்கார் அவர்கள் நமது கிராமானுகூலனுக்கு ரூபா 10 நன்கொடை யளித்துள்ளார்கள் அதை மிகுந்த வந்தனத்துடன் ஏற்றுக்கொள்ளுகிறோம். திருப்பனந்தாள் கிராம முன்சீப் ஸ்ரீமான் T. S துரைசாமிபிள்ளை அவர்களும் கும்பகோணம் டவுன் கிராம முன்சீப் ஸ்ரீமான் V. சாமினாதமுதலியார் அவர்களும் தகுந்தபடி நன்கொடையளித்து கிராமானுகூலனை ஆதரிப்பதாக வாக்களித்துள்ளார்கள். தஞ்சை ஜில்லா கிராம உத்தியோகஸ்தர்கள் மனதுவைத்தால் கிராமானுகூலனை சரிவர நடத்துவது சிரமமாகாது. அவரவர்கள் தங்கள் யுக்தானுசாரம் உடனே உதவிபுரிந்து கிராமானுகூலனை தங்கள் சொந்த பத்திரிகையாக மதித்து ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

சந்தா தொகையை உடனே மணியார்டர்செய்யக்கோருகிறோம்.

பத்திராதிபர்.

இந்திய ஆட்சி முறை.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்னும் பின்னும்.

இந்தியாவின் புராதனச்சிறப்பு.

கிராம ஸ்தாபனங்களின் மேன்மை.

ஓர் இந்திய மாணவர் ஆக்ஸ்போர்டில் படித்த வியாஸம்.

(188-வது பக்கத்தின் தொடர்ச்சி)

பதிய ஸ்தாபனங்கள்.

மேற்கூறியதுபோன்ற ஸ்தாபனங்கள் இந்தியா முழுதும் இருந்தன. கிழக்கிந்தியக் கம்பெனியாரது நிர்வாகம் இந்தியாவில் நாளடைவில் பலப்பட்டு வருகையில் துவக்கத்தில் அவர்களது ஆட்சிமுறையும் பெரும்பாலும் இந்த ஸ்தாபனங்களின் ஒழுங்கையே பின்பற்றியதாக விருந்தது. துவக்கத்தில் இந்த ஸ்தாபனங்களைப்பற்றிய அறிவு கம்பெனியார்களுக்கு அதிகமில்லாமலிருந்தது கம்பெனி ஜுமாஸ்தாக்கள் அவைகளைப்பற்றி யறிய அவல்கொண்டு விசாரிக்க முற்படுவார்களானால் இவைகள் எவ்வாறு வேலைசெய்கின்றன வென்பதில் அவர்களுக்கு ஆச்சரியமும் திருப்தியும் மேற்பட்டுவிடுவதாயிருந்தது. அந்த ஸ்தாபனங்கள் சர்வ சுதந்தரமுள்ளவைகளாக விருந்தன. இந்தியாவின் எல்லா பாகங்களிலும் பரவிவந்த கலெக்டரது அதிகாரத்திற்கு ஒவ்வாததாயிருந்துவந்தது. நாளடைவில் பற்பல இலாகாக்களிலும் பற்பல மாறுதல்கள் செய்யப்பட்டன. இம்மாறுதல்களெல்லாம் கிராம ஸ்தாபனங்களைப் பெரிதும் பாதித்தன இதுகாலே அவைகள் எவ்வித அதிகாரமுமின்றி சீர்கெட்ட நிலைமையிலிருக்கின்றன. அவைகளின் கௌரவம் அறவே ஒழிந்துவிட்டது. கிராமாதிகாரி, கணக்கப்பிள்ளை, தலையாரி, வெட்டி முதலியவர்கள் அரசாங்க ஊழியர்களாகிவிட்டனர். அவர்களது சம்பளங்களும் நிர்ணயிக்கப்பட்டுவிட்டன. கிராம ஸ்தாபனங்களின் ஸ்தானங்களில் ஏற்பட்டிருக்கும் நகரபரிபாலன சபைகள், லோகல் போர்டு சபைகள் முதலிய ஸ்தாபனங்கள் அன்னியதேச ஸ்தாபனங்களாக விருக்கின்றன லோகல் போர்டு சபைகளில் பெரும்பாலும் அந்தந்த ஜில்லா கலெக்டர்களே தலைமை வகித்து வருகின்றனர். நகரபரிபாலன சபைகளில் பெரும்பாலும் அரசாங்கத்தாரின் ஆதிக்கமே அதிகமாகவிருந்துவருகிறது. இவைகள் எந்த ஸ்தாபனங்களுக்குப் பதிலாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவோ அவைகளைப்போல் எந்த ஒரு அம்சத்திலுங்கூட வேலைசெய்து வரவில்லை யெனக் கூறுவது மிகையாகாது.

கரையேட்டு முறை

முற்காலங்களில் நிலங்களெல்லாம் எந்த தனி நபருக்கும் சொந்தமாகவிராமல் பற்பல கிராமங்களுக்கும் சொந்தமாயிருந்தனவென்றும், நிலத்தீர்வை எந்த தனி நபரிடமிருந்தும் வசூலிக்கப்படாமல், அந்தந்த ஸ்தல ஸ்தாபனங்களினின்றும் வசூலிக்கப்பட்டதென்றும் கூறினோம். அந்தந்த கிராமங்களின் மகசூல் மொத்தமாகச் சேகரிக்கப்படும். பங்கு பிரிக்கப்படுமுன், அரசாங்கத்திற்கென மகசூலில் ஒரு பகுதியைத் தனியாகப் பிரித்து வைத்துவிடு

வார்கள். அதன் பின்னரே எல்லோரும் பங்கிட்டுக்கொள்ளுவார்கள். இவ்வழக்கம் வெகு சுலபமாயிருப்பதோடுங்கூட எல்லோருக்கும் திருப்தியையும் அளித்துவந்தது. இக்காலத்திலுங்கூட சிற்சில பாகங்களில் இவ்வழக்கம் இன்னும் அனுஷ்டானத்திலிருந்துவருகிறது. பிற்காலங்களில் புதிய மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன அவற்றைப்பற்றி நாம் கவனிக்கவேண்டியது அவசியம்.

நிலவரி வசூலித்தல்

மொகலாய ஆட்சியின் பிற்காலத்தில நிலவரிவசூலித்தல் ஜமீந்தார்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டது. ஆங்கில நிலச்சுவான்தார்களின் சொத்துரிமைகள் சம்பந்தமாக கிழக்கிந்தியக் கம்பெனியார் சிற்சில மாறுதல்செய்ய முற்பட்டனர். கிராமச்சங்கங்கள் நாளடைவில் பாழடையலாயின அரசாங்கவருமானம் ஒழுங்காகவந்துகொண்டிருந்ததால் வேறுவிஷயங்களதுவும் நன்குகவனிக்கப்படவில்லை. இதன்பயனாக தனி மனிதர்கள் நிலங்களுக்குச் சொந்தக்காரர்களாயிருத்தல் எனும் முறை ஓங்கி வளரலாயிற்று. முந்திய முறையால், விவசாயிகளுக்கும் அரசாங்கத்தாருக்கும் வரும்படி கிடைத்துவந்தது. பிந்திய முறைப்படி நிலத்திலிருந்து கிடைக்கும் வரும்படியை மூன்று பங்குகளாகப் பிரிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. அதாவது குடியானவர்கள், நிலச்சுவான்தார்கள் அரசாங்கத்தார் ஆகிய மூவரும் நிலவரியைப் பங்கு பிரித்துக்கொள்ளும்படியாய் விட்டது. முற்காலங்களில் நிலத்தீர்வை விகிதமும் அநேகமாக ஓரே நிலைமையிலிருந்துவந்தது. மொகலாயர்களது ஆட்சியில் விவசாயிகள் வரிசெலுத்தத் தவறினால் சிறைக்கு அனுப்பப்படுவார்கள். அல்லது அவர்களது சொந்த நிலங்களின் மகசூல் ஜப்தி செய்யப்படும். இப்பொழுது அவர்களது நிலங்களை அவர்களது சம்மதமின்றியே விற்றுவிடக்கூடிய நிலைமை யேற்பட்டிருக்கிறது. இதன் பயனாக வட்டிக்குக் கடன் கொடுப்பவர்களது தொந்தரவு அதிகப்பட்டுவிட்டது ஆகவே விவசாயிகள் மகசூல் அறுவடையாவதற்குமுன்னதாகவே அதனை விற்றுவிடவேண்டியநேரிடுகிறது. மொகலாயர்களது ஆட்சிகாலத்திலும், மகாராஷ்டிரரது ஆட்சிகாலத்திலும் தற்பொழுது நடப்பதுபோல் விஸ்தீரணத்திற்குத் தகுந்தவாறு வரி வசூலிக்கப்படவில்லை. இந்தியாவில் முற்காலத்தில் நடைபெற்று வந்ததுபோல் மகசூலுக்குத் தகுந்தபடியே வரி வசூலிக்கப்பட்டுவந்தது. இம்முறை அனுஷ்டிக்கப்பட்டு வந்ததால் மகசூல் கிட்டாவிடில் விவசாயிகள் நிலத்தீர்வை அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டியதில்லை என்பது தானாக ஏற்பட்டுவந்தது. மேலும் அக்காலங்களில் அரசாங்கத்தாருக்குச் சேரவேண்டிய விகிதம் அடிக்கடி உயர்த்தப்பட்டு வரவில்லை. 1826-ம் வருஷம் ஸர் தாமஸ் மன்ரோ எழுதியிருப்பதாவது:— "தற்போதைய நிலத்தீர்வை விகிதத்தைக் கவனிப்பின், விவசாயிகள் சிறிதும் விருத்தியடைய வழியேயில்லை யென்றுதான் சொல்ல வேண்டும். நிலத்திலிருந்து கிடைக்கும் மொத்த வருமானத்தில் பாதியை அரசாங்கத்தாருக்குக் கொடுக்கவேண்டியதாய் இருக்கிறது இவ்விகிதம் வெகு அதிகமென்றே கொள்ளவேண்டும் இதனால் ஜனங்கள் என்றும் தரித்திர திசையிலேயே இருக்க வேண்டியதாயிருக்கிறது. காலவேற்றுமையினாலோ வேறெக்காரணத்தினாலோ விளைவில்லாமல் போகுமானால் அரசாங்கத்தார் வரி வஜாச்செய்வதோடு அவர்களுக்கு உணவுப்பதார்த்தங்களோ அல்லது பொருளோ கொடுத்துதவ வேண்டியது அவசியமாகும். அவ்வாறு செய்வதால் பசிப்பிணியால் வருந்தியிருக்கும் பல ஆடவர்களையும், பெண்டிர்களையும், சிறார்களையும் காப்பாற்றலாம்."

உயர்த்தப்பட்டிருக்கிறது.

அக்காலத்திற்குப் பின்னர் நிலத்தீர்வை வெகுவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. விவசாயிகளின் நிலைமையும் வெகு கேவலமாகிவிட்டது. மிகவும் பிற்போக்கானவரென்று எல்லோராலும் கருதப்படும் கர்ஸன்பிரபுவுங்கூட "பஞ்சகாலங்களில் தேவைப்படும் உணவுப்பொருட்களை சாதாரண காலங்களிலேயே விவசாயிகளும் நிலச்சுவான்தார்களும் சேமித்துவைத்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு மகசூல்

அவர்களிடம் மிஞ்சும்படி செய்யவேண்டுவது அரசாங்கத்தாரது கடமை" எனக் கூறியிருக்கிறார்.

இதுகாலை ஒருக்காலும் முடியாது.

இக்காலத்தில் சேமித்து வைத்துக்கொள்ளுதலென்பது ஒருக்காலும் முடியாது. சாதாரண காலங்களிலேயே விவசாயிகளின் குடும்பங்களுக்குப்போதிய அளவு தான்யம் அவர்களிடம் மிஞ்சுவதில்லை. இவ்வித நிலைமையில் பஞ்சகாலத்தில் அவர்களிடம் ஏதாவது தான்யமிருக்குமாவென்பதை நாம் சொல்லவேண்டுவதில்லை. முற்காலங்களிலும் சிற்சில ஆண்டுகளில் வருணபகவான் கிருபை செய்யாமல் பஞ்சமேற்பட்டிருப்பதுண்டு. இக்காலத்தில் தரித்திரம் தெய்வச்செயலாகவில்லாமல் ஜனங்களிடை புகுத்தப்படுவதுபோல் அக்காலங்களில் நடைபெற்றதில்லை. அக்பர் மன்னர் காலத்தில் கொடிய பஞ்சங்கள் தோன்றியும், ஜனங்கள் எவ்வித கஷ்டங்களும் அனுபவித்ததாக அபுல்பாஸல் என்பவர் தான் எழுதிய நூலில் குறிப்பிடாதது தனக்கு ஆச்சரியமாயிருக்கிறதென்றும், ஜெஸியூட் சரித்திராசிரியர்களுங்கூட குறிப்பிடாததிலிருந்து அப்பஞ்ச காலங்களில் ஜனங்கள் துன்புறவில்லையென்று எண்ணவேண்டியிருக்கிறதென்றும், உண்மையில் ஜனங்கள் துன்புற்றிருப்பின் அவர்கள் குறிப்பிடத் தவறியிருக்கமாட்டார்களென்று திடமாகக் கூறலாமென்றும் வின்ஸெண்டு ஸ்மித் என்பவர் கூறியிருக்கிறார். இக்காலத்தில் விவசாயிகளின் நிலைமை வெகு பரிதாபகரமாயிருக்கின்றது. அவர்கள் என்றும் மீளாப் பஞ்சத்திலும், மீளாக் கடனிலும் ஆழ்ந்திருக்கும்படி செய்யப்பட்டிருக்கின்றனர்.

நிலவரி நிர்ணயம்

வரிவிகிதம் நெடுங்காலம்வரை மாற்றப்படபோவதில்லையென்றும், வருமானத்தில் $\frac{1}{4}$-பாகத்திற்கதிகமாக எக்காலத்திலும் வரி வசூலிக்கப்படமாட்டாதென்றும் ஏற்படும்வரை அவர்களது நிலைமை சிறிதும் விருத்தியடையப்போவதில்லை.

நீதி நிர்வாகமும் போலீஸும்

பொதுஜன சாவதானத்திற்குற்ற ஸ்தாபனங்களை கவனிப்போமாயின், பிரிட்டிஷார் இந்தியாவிற்கு வருமுன் இந்தியாவில் நீதி நிர்வாகமும், பாதுகாப்பு நிர்வாகமும் திறம்பட நடந்துவந்தனவென்று புலனாகும். இந்துக்களின் சட்ட விதிகளும், மகம்மதியர்களின் சட்டவிதிகளும் அந்தந்த மதஸ்தர்களைக் கட்டுப்படுத்துவதாயிருந்தன. அவைகளின் தத்துவங்கள் இன்றைக்கும் அனுஷ்டானத்திலிருந்துவருகின்றன. இவ்விரு மதங்கள் சம்பந்தமான சட்டவிதிகளின் நுட்பங்கள் அவற்றைக்கற்று நன்கு பாண்டித்தியம் பெற்றவர்களுக்கு மட்டுமே புலனாகும். ஆங்காங்குள்ள பழக்க வழக்கங்களே சட்ட ஒழுங்குகள் என்பதை யாவரும் அறிவர். "பொதுவாகக் கூறுமிடத்து இந்தியாவில் அனுஷ்டானத்திலிருந்து வரும் சட்டங்கள் நியாயமல்லாத நிபந்தனைகளை ஜனங்களின்மீது சுமத்துவதாயிருக்கவில்லை. வியாபாரம் செலாவணி, முதலிய விஷயங்களிலும் தலையிடுவதாயிருக்கவில்லை. ஆகவே யாவும் நியாயமாக எவ்வாறு நடைபெற்றுவரவேண்டுமோ அவ்வாறு நடைபெற்றுவந்தன. எல்லா வகுப்பார்களும் சர்வ சுதந்திரங்களோடும் வாழ்ந்துவந்தனர்." (இவ்விவரம் காம்பெல் என்பவரால் 1825-ம்வருஷம் வெளியிடப்பட்ட "நவீன இந்திய" எனும் நூலில் 107-ம் பக்கத்தில் காணப்படுகின்றது.) கிழக்கிந்தியாக் கம்பெனியார் துவக்கத்தில் இந்தியாவில் ஏற்படுத்திய நீதி ஸ்தலங்களில், ஆங்கிலப்பொதுச்சட்டத்தை ஐரோப்பியர்கள், இந்தியர்கள் ஆகிய எல்லோர் விஷயத்திலும் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர முயற்சிகள் செய்யப்பட்டன. ஆனால் அம்முயற்சி பயன்படாதென்பதை அவர்கள் வெகு சீக்கிரத்தில் தெரிந்துகொண்டார்கள். இருந்தாலும் சென்ற நூறு ஆண்டுகளாக இந்தியாவில் ஆங்கிலச் சட்டம் நாளடைவில் பரவி வந்திருக்கிறது. இந்தியாவில் சட்டங்கள் இயற்றுதல் வெகு சுலபமாகவும் திட்டமாகவும் நடைபெற்று வந்திருக்கிறது. நீதிபதிகளும் மாஜிஸ்டிரேட்டுகளும் சட்ட அனுபவம் இல்லாதவர்களாகவிருக்கவில்லை. ஆகவே சட்டவிதிகளை எல்லோரும் ஆதரித்துவந்தனர். எந்த நாட்டுச் சட்டங்களும் அந்தந்த நாட்டவர்களின் வாழ்க்கைத் தத்துவங்களையே விளக்குவதாயிருக்கின்றன. நிலைமைக்குத் தகுந்தவாறு பாஷைகளைப்

சட்டங்களும் வெகுவாக விருத்தியடைந்துவந்திருக்கின்றன. இந்தியாவிலுள்ளவர்கள் தங்களது பழந்த வழக்கங்களை வெகுவாக மதித்து வந்ததினால் அவை களையாதாரமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட சட்ட திட்டங்களையும் கௌரவித்து வந்தனர். ஆகவே அவைகள் பெரிதும் விருத்தியடைந்தன. இங்கிலாந்தின் சமூக வாழ்க்கைக்கும் இந்தியாவின் சமூக வாழ்க்கைக்கும் பெரும் வித்தியாஸங்களுண்டு. ஆகவே இங்கிலாந்தின் சமூக வாழ்க்கையை யாதாரமாகக்கொண்டு ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஆங்கில நீதி சாஸ்திரமுறைகளும், சட்டவிதிகளும், பிறவும் இந்தியாவிற்கு ஒத்ததாயிருக்கவில்லை. மேலும் சட்டங்களை நிர்மாணிப்பவர்கள் தங்களது சொந்த தேசீய அனுபவத்தை ஆதாரமாகக்கொண்டு ஏற்படுத்தும் விதிகள் உலகம் முழுமைக்குமே பொருந்த மானவைகளென்று கருதுகின்றனர். இவ்விஷயமாக ஒவ்வொரு அம்சத்தையும் நாம் கவனிக்க வேண்டிய அவசியமில்லை எனினும் ஒருவிஷயத்தை மட்டும் குறிப்பிடவேண்டுவது அவசியமானதாகிறது. வட்டிக்குப்பணம் கடன் கொடுப்போர்களும் விவசாயிகளும் சட்டப்படி ஒரே நிலைமையில் தானிருந்துவந்தனர். ஆகவே யாவும் சரியாகவிருந்தன. இவ்விரு பிரிவாரும் தற்கால முறைப்படி தங்களைக் காத்துக்கொள்ள எதிர்வாதம் செய்து கொள்ளக் கூடாதவர்களாக இருக்கின்றனர். இவ்வித நிலைமையைச் சரிப்படுத்தும் பொருட்டு தட்சிணத்திலும் பிறவிடங்களிலும் "கடன்தீர்க்க வழியில்லை" எனும் சட்டம் நிறைவேற்றப்படவேண்டியதாயிற்று.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்.

பிரிட்டிஷ் ஆட்சிகாலத்திற்கு முன் இந்தியாவில் ஸிவில் வழக்குகளில் பஞ்சாயத்து சபைகளின் மூலமாகவும், கிரிமினல் வழக்குகளில் மீர் அடில் காஜி முதலியவர்களடங்கிய விசாரணை சபையினர் மூலமாகவும் நீதி வழங்கப்பட்டு வந்தது. இவ்விசாரணை சபையின் அங்கத்தவர்களையும், பஞ்சாயத்து சபையங்கத்தவர்களையும் வழக்குகளில் சம்பந்தப்பட்ட இரு கட்சியினரும் தெரிந்தெடுப்பார்கள். இருதிறத்தவர்களின் சாட்சியங்களையும் விசாரித்து நாட்டு வழக்கத்திற்குதக்தாற்போல் தீர்ப்புச்சொல்லப்படும். ஏராளமானசொத்துகள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் சாட்சிகளின் வாக்கு மூலங்கள் முதலியன குறித்துக்கொள்ளப்பட்டு எழுத்து மூலமாகத் தீர்ப்பு சொல்லப்படும். சாதாரண வழக்குகளில் வாக்குமூலங்கள் முதலியன குறித்துக்கொள்ளப்படமாட்டா. தீர்ப்புகளும் எழுதிப்படிக்கப்படமாட்டா. சாட்சியங்களை கேட்டுக்கொண்டு அப்படியே தீர்ப்புசொல்லிவிடுவார்கள். இவ்வளவு தொகைகட்குட்பட்ட வழக்குகளை மட்டுந்தான் பஞ்சாயத்து சபையார் விசாரிக்கலாம் என்ற வியதி கிடையாது. பஞ்சாயத்து சபையை ஏற்படுத்துவதும் அச்சபைகளின் தீர்ப்புகளை அமுலுக்குக் கொண்டு வருபவருமான "பேட்டல்" எனும் அதிகாரி பஞ்சாயத்து சபைகளின் வேலையில் எவ்வகையிலும் தலையிட முடியாது.

பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பின்.

கிழக்கிந்தியக் கம்பெனியார் சட்டங்கள் நிர்மாணிக்கும் அதிகாரத்தையும், நீதி வழங்கும் அதிகாரத்தையும் அக்கம்பெனிக்கு வழங்கிவிட்டனர். 17ம் நூற்றாண்டுத் துவக்கத்தில் வங்காளத்தில் "மேயர்ஸ் கோர்ட்ஸ்" என்ற நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்நீதி மன்றங்களில் கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த வியாபார ஊழியர்களும், சட்டஞானமும் நீதி வழங்கும் அனுபவமும் சிறிதுமில்லாதவர்களும், அடங்கியிருந்தனர்" என்று மே, என்பவர் எழுதிய கிழக்கிந்தியக் கம்பெனிச் சரித்திரம் 222-ம் பக்கத்தில் கூறப்பட்டிருக்கிறது. வாரன் ஹேஸ்டிங்ஸ் காலத்தில் கல்கத்தாவில் ஓர் உயர்தர நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டது. அதில் ஸ்தானம் வகித்த நீதிபதிகளைப் பற்றிக் கூறயிடத்து மேற்கூறிய சரித்திராசிரியர் "ஆங்கிலச் சட்டங்களின் மகத்துவங்களைக் கண்டானந்தித்த நிலைமையில் இந்தியாவிற்கு வந்தனர். (அதாவது ஆங்கிலச் சட்டங்களே சிறந்தவைகள் எனும் மமதையுடன் இந்தியாவிற்கு வந்தனர்)" என்று கூறியிருக்கிறார். விதமாகக் மிகக் கேவலமான ஸ்திதியில் காரியங்கள் நிகழ்ந்து வந்தன.

தொடரும்

கிராம உத்தியோகஸ்தர்கள்.

மாகாண மகாநாடு, பரமக்குடி. (3-10-27)

அக்கிராஸனர் பிரசங்கம்.

ஸ்ரீமான் எல். கே. துளசிராம் எம். எல். ஸி., அவர்கள் அக்கிராசனப் பிரசங்கத்தின் சாரம் வருமாறு:-

இந்தேச நிர்வாகத்தில் மாட்சிமை தங்கிய இராஜ சக்கிரவர்த்தி அவர்களை முதன்மையாகக் கொண்டவர்க்கத்தில்கிராமநிர்வாகத்தையும் பொறுப்பையும் உடைய நீங்கள் பிரதானமான அங்கத்தினர்கள் கிராம உத்தியோகஸ்தர்கள் என்ற பெயரை உடையவராக இருப்பினும் உண்மையில் நீங்களே கிராமாதிபதிகள். இம்மாகாணத்தின் அரசியல் நிர்வாகத்தின் திறவுகோல் உங்கள் கையில் இருக்கிறது. கிராம உத்தியோகஸ்தர்களாகிய உங்களை அஸ்திவாரமாகக்கொண்டுதான் அரசியல் கட்டடம் கட்டப்பட்டிருக்கின்றது. தேர் நிலை பெறுவதற்கு அச்சாணி ஆதாரமாயிருப்பதுபோல் அரசியல் தேரானது உங்களுடைய திறமைவாய்ந்த நிர்வாகத்தினாலே நடைபெறுகின்றது. நீங்கள் திருப்தியாயும் சந்தோஷமாயுமிருந்தால் மட்டும் கிராம பரிபாலனமும் திருப்தியாய் நடைபெறும். உங்கள் மனம் கோணினால் செங்கோலும் கோணும். பற்பல வகுப்பாரும் பற்பல தொழிலாளரும் இப்பொழுது சங்கங்களாகச் சேர்ந்து ஒற்றுமைப்பட்டு தங்களுக்கேற்ப விதிகளை அமைத்துக்கொண்டு தங்கள் தங்கள் நன்மைக்காக பாடுபடுவது நவீன முறையாக இருந்துவருகின்றது. இப்படி சங்கங்கள் சேருவதால் சங்க அங்கத்தினர்களுக்கு உற்சாகமும் தேசமுன்னேற்றமும் உண்டாகின்றன, கிராம உத்தியோகஸ்தர்களும் பிறருக்கு அடிமையல்லவென்றும் கடவுளால் கொடுக்கப்பட்ட சுதந்திரங்களுடைய மானுஷ்ய வர்க்கமென்றும், உணர்ந்து விடுவீர்களானால் அது கிராம நிர்மாணத்திற்கு அஸ்திவாரமாகும், [illegible]காணத்திலுள்ள கிராம உத்தியோகஸ்தர்களா [illegible]ங்கள் கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம் ஏற்படுத்தி ஒற்றுமைப்பட்டு உங்களை ஒரு அந்தக்குட்படுத்திக்கொண்டு கட்டுப்பாடுடன் நடந்துவருவதைக்கண்டு நான் சந்தோஷப்படுகிறேன், உங்களில் எல்லா அங்கத்தினர்களும் உற்சாகிகளாகி உழைத்துவரவேண்டும், அப்பொழுதுதான் உங்களுடைய கோரிக்கைகள் நிறைவேறும், உங்களுடைய பாத்தியங்களை இப்பொழுதுதான் நீங்கள் அறிந்து வருகிறீர்கள்.

கிராம நாட்டாண்மை அல்லது கிராம அம்பலம் மணியம், மணியகாரர், பெத்தமாப்பு, ரெட்டி என்ற பதங்கள் கிராமத்திலுள்ள பெரியதனக்காரர் அல்லது முதல் குடியைக் குறிப்பிடுகின்றன, ஆங்கிலேய அரசாட்சிக்கும் மொகலாய அரசாட்சிக்கும் முன்னும் இந்நாடு ஹிந்து அரசர்களால் அரசாளப்பட்ட காலத்திலும் கிராம உத்தியோகஸ்தர்களாகிய நாட்டாண்மைகாரர்கள், கிராமகணக்குப்பிள்ளைகள் இருந்தே வந்திருக்கின்றனர், பார்லிமெண்ட் கமிட்டியாரால் பிரசுரம் செய்யப்பட்ட ஐந்தாவது ரிப்போர்ட்டிலும் கிராம உத்தியோகஸ்தர்கள் மிகவும் பூர்வீகமான அதிகாரிகளென்று சொல்லப்பட்டிருக்கின்றது, இந்து ராஜாக்கள் காலத்தில் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு மானிய சுதந்திரங்கள் கொடுக்கப்பட்டு வந்திருக்கின்றன.

சென்னை ராஜதானியின் மொத்த விஸ்தீரணம் சுமார் 1½-லட்சம் சதுரமைலாகும், இதில் சென்னையிலுள்ள ஜமீன்தாரிகளின் விஸ்தீரணம் சுமார் 30,000 சதுரமைலாகும், அதாவது சென்னைராஜதானியின் மொத்த விஸ்தீரணத்தில் ஐந்தில் ஒரு பாகம் சென்னையிலுள்ள ஜமீன்தாரிகளில் சேர்ந்திருக்கின்றன, சென்னை இராஜதானியிலுள்ள ஜமீன் அயன்ரயத்துவாரி கிராமங்களின் மொத்தம்-25291,

சென்னையிலுள்ள ஜமீன்தார்கள் எல்லோரும் சேர்ந்து சுமார் 50-லட்ச ரூபாய்மட்டும் பேஷ்கஷ் ரூபமாக தீர்வை செலுத்திவருகிறார்கள், சுரோத்திரியம் அல்லது இனும் கிராமங்களிலிருந்து சுமார் 6½ லட்சம் ரூபாய் குயிட்ரெண்டு மூலமாய் செலுத்தப்படுகிறது,

சென்னை இராஜதானி 1335ம் பசலி கவர்ன்மெண்டாருடைய ஜமாபந்தி ரிபோர்ட்டின்படி ரயத்துவாரி புலன்களின் விஸ்தீரணம் 267 லக்ஷம் ஏக்கர். அவைகளில் ஒருபங்கு நஞ்சைகளாகவும் நான்கு பங்கு புஞ்சைகளாகவும் இருக்கின்றன. இதற்கு ஏற்பட்ட நிலத்தீர்வை 564 லட்சம் ரூபாய் இப்பசலியில் மொத்தம் சாகுபடியான புலன்களின் விஸ்தீரணம் 203 லட்சம் ஏக்கர். இதில் நஞ்சை சாகுபடி ஏக்கர் 49 லட்சம், புஞ்சை சாகுபடி ஏக்கர் 184 லட்சம்.

இப்பசலியில் விதிக்கப்பட்ட தண்ணீர் தீர்வை இரண்டாவதுபோக தீர்வை இவைகளின் மொத்தம் 56 லட்சம், நடப்பு வருஷத்திய லாண்டு ரிவினியூ செஸ் முன் பசலி பாக்கி இவைகளின் மொத்தம் ரூபா 872 லட்சத்தில் கிராம உத்தியோகஸ்தர்கள் தங்கள் விடாமுயற்சியில் ரூபா 867 லட்சம் வசூலித்து கொடுத்திருக்கிறார்கள். இதற்குப்பிரதியாக கவர்ன்மெண்டு அயன் ஜமீன் கிராமங்களிலுள்ள எல்லா கிராம உத்தியோகஸ்தர்களுக்கும், வெட்டி நீர்கந்தி முதலிய கீழ் சிப்பந்திகளுக்குமாக சேர்ந்து கொடுக்கப்பட்ட வருஷத்திய மொத்த சம்பளம் ரூபா 120 லக்ஷம். மொத்த வருஷாந்திர வசூல் ரூபா 870 லட்சத்தில் ஜில்லா நிர்வாக உத்தியோகஸ்தர்களுக்கு ஒருகோடி ரூபாயும் கீழ் சிப்பந்திகள் உள்பட கிராமஉத்தியோகஸ்தர்களுக்கு ரூபா 120 லட்சமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்டார் ரிப்போர்ட்டின்படி ஜில்லா நிர்வாக உத்தியோகஸ்தர்களுக்கு நூற்றுக்கு 13¾ விதம் செலவிடப்பட்டிருப்பதாய் கணக்குக் காட்டியிருக்கின்றார்கள்.

சென்னை இராஜதானியிலுள்ள கிராம முனிசீப்புகள், ஹெட்மென்கள், டிரீயூன் ஆபீஸர்கள் தொகை 26464 என்றும் இதில் ரயத்துவாரி கிராமங்களிலுள்ள கிராமமுனிசீப்புகள் 16434 என்றும் ஜமீன் எஸ்டேட்களிலுள்ள டிரீயூன் ஆபீஸர் ஹெட்மென் இவர்கள் தொகை 10030 என்றும் அயன் ஜமீன் கிராமங்களிலுள்ள கர்ணங்களின் தொகை மொத்தம் 21983 என்றும் இதில் ரயத்துவாரி கிராமங்களிலுள்ள கர்ணங்கள் 14875 என்றும், ஜமீன் கிராமங்களிலுள்ள கர்ணங்கள் 7108 ஆக மொத்தம் கிராம உத்தியோகஸ்தர்கள் 48447 என்றும், வெட்டி நீர்கந்தி முதலியவர்களின் தொகை 30462 என்றும் சொல்லிவிட்டு சம்பளத்தைப்பற்றி பேச ஆரம்பித்தார்.

ரயத்துவாரி கிராமங்களிலுள்ள கிராம முனிசீப்புகள் கர்ணங்கள் இவர்களுக்கு 61.37லட்சமும், ஜமீன் கிராமங்களிலுள்ள டிரீயூன் ஆபீசர்கள், கர்ணங்கள் இவர்களுக்கு 16.47லட்சமும் ஆக மொத்தம் 77.84லட்ச ரூபாய் வருடந்தோறும் கிராமஉத்தியோகஸ்தர்களுக்கு வருஷம் ஒன்றுக்கு 100-க்கு ரூபாய் எட்டு மட்டும் செலவிடப்படுகிறதென்று கணக்கேற்படுகிறது.

சம்பள விஷயம்.

பிழைப்பு நடப்பதற்கு வேண்டிய சம்பளத்தையாவது கவர்ன்மெண்டார் கொடுக்கவேண்டுமென்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய அடிப்படையான கொள்கை. நெற்றியின் வேர்வை கீழே சிந்தும்படியாக உடம்பை உழைத்து யோக்கியப்பொறுப்புடன் வேலைசெய்கிறவன் தன்னையண்டி உள்ளவர்களுடன் பிறர் தயவை எதிர்பாராமல் வாழும்படியான சம்பளம் பெற பாத்தியமுள்ளவனாகிறான் எனினும், கிராம உத்தியோகஸ்தர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளம் அவர்களுடைய பொறுப்பையும் வேலையின் பளுவையும் கவனிக்குமிடத்து மிகவும் சொல்பமென்றே சொல்லவேண்டும். கிராம உத்தியோகஸ்தர்களுக்கு இப்போதைய சம்பளம் ரொம்பவும் குறைவாயிருப்பதால் குறைந்தது மாதமொன்றுக்கு முப்பதுரூபாய் சம்பளம் கொடுக்க வேண்டியது கவர்ன்மெண்டாருடைய கடமை. இவ்விதம் கிராம உத்தியோகஸ்தர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்கு போதுமான பணமில்லை

யென்று கவர்ன்மெண்டார் நினைக்கும் பக்ஷத்தில் ரிவினியூ இலாகாவிலுள்ள மாதம் ஒன்றுக்கு 1000-ரூபாய்க்கு மேற்பட்ட சம்பளங்களை 1000-ரூபாய்க்குமேல் எந்த உத்தியோகஸ்தருக்குமே கொடுக்கிறதில்லையென்று ஒருபுதிய விதியேற்படுத்தினால் அதில் மிச்சமாகும் தொகையைக்கொண்டு கிராம உத்தியோகஸ்தர்களுடைய சம்பளத்தை மாதமொன்றுக்கு முப்பது ரூபாயாக்குவதற்கு ஓர் வித இடையூறுமிராது. கிராம உத்தியோகஸ்தர்களை புறம்போக்கு நிலங்களில் திருட்டுபோகும் மரங்களுக்கு ஜவாப்தாரியாக்குவது கொஞ்சமும் நியாயமில்லாத காரியம். அவ்வழக்கத்தை எந்த நாகரீகமடைந்த அரசாங்கத்தாரும் அனுஷ்டிக்கிறதில்லை நமது கவர்ன்மெண்டாரும் இந்த அக்கிரமமான விதியை சீக்கிரத்தில் ரத்துசெய்யவேண்டும்.

படி விஷயம்,

கிராம உத்தியோகஸ்தர்களை தாலூகா கச்சேரிக்கும் கோர்ட்டுகளுக்கும் அழைக்கும்போது மைல் ஒன்றுக்கு இரண்டணா வீதம் மைலேஜும் ஒரு ரூபாய் தினப்படியும் கொடுக்கவேண்டியது நியாயம். இதை கவர்ன்மெண்டார் சீக்கிரத்தில் அனுஷ்டானத்திற்கு கொண்டுவருவார்களென நம்புகிறோம்.

கிராம உத்தியோகஸ்தர்கள் மதிப்பு வாய்ந்தவர்களாயும், கிராமங்களில் செல்வாக்குடையவர்களாயும் பெரிய குடித்தனக்காரர்களாயும் இருப்பதால் கலெக்டர் ஆபீசிலுள்ள எழுத்துசிப்பந்திகள் கிராம உத்தியோகஸ்தர்களை மரியாதையாய் நடத்தவேண்டும். அப்படியில்லாமல் கிராம உத்தியோகஸ்தர்களை தங்களுக்கு கீழ்பட்டவர்களென்று நினைத்து கவர்ன்மெண்டாரால் 14—8—20-ல் பிறப்பித்துள்ள உத்தரவில் கண்ட மரியாதை அம்சங்களை கீழ் உத்தியோகஸ்தர்கள் அதன்படி அனுசரிப்பதில்லையென்று கேட்க துக்கமாயிருக்கின்றது. கவர்ன்மெண்டார் மேற்சொன்ன உத்தரவை மிகுந்த ஜாக்கிரதையுடனும் கண்டிப்பாயும் அனுஷ்டிக்குமாறு எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும் உத்தரவு செய்ய வேண்டியது. கிராம உத்தியோகஸ்தர்கள் யாவரும் அந்தஸ்துள்ளவர்கள் என்பதைக் கருதியே இதுவரையில் கோர்ட்டு காரியங்களுக்காக இரண்டாவது வகுப்பு படியும், செலவும் கொடுபட்டு வந்திருந்ததை சமீப உத்தரவுப்படி மூன்றாவது வகுப்பாக மாற்றியிருப்பதை கேட்டு வருத்தமடைகிறேன். கிராம உத்தியோகஸ்தர்களுடைய அந்தஸ்தையும் மரியாதையையும் உயர்த்தினால் மட்டுமே சர்க்காருடைய அந்தஸ்தும் உயருமென்பதை கவர்ன்மெண்டார் உணரவேண்டும். கிராம உத்தியோகஸ்தர்களுடைய பாட்டாவிஷயத்தில பூர்வ அனுஷ்டானப்படி இரண்டாவது வகுப்புப்படியே கொடுக்கவேண்டும் தாசில்தார்களும், டிப்டி தாசில்தார்களும் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு அபராதம் விதிக்கக் கூடாதென்று 1922-ம் வருடம் டிசம்பர் 12உ-ல் உத்தரவாகியிருந்த அபராதமென்ற வார்த்தையை மட்டும் நீக்கி சம்பளம் பிடித்தமென்றுசொல்லி சம்பளத்தையும் பிடித்து வருகிறார்கள். சம்பளத்தைப் பிடிக்கும், அதிகாரம் தாசில்தார்களுக்குமிருக்கக்கூடாது.

கிராம உத்தியோகஸ்தர்களின் பரம்பரை பாத்தியம்.

கிராம உத்தியோகஸ்தர்களுக்கு நமது மாகாணத்தில் தஞ்சாவூர், சேலம், தென்கன்னடம், நீலகிரி இந்த நான்கு ஜில்லாக்கள் முழுமையிலும் திருச்சி தென்னாற்காடு ஜில்லாக்களில் சில பாகங்கள் தவிர நமது மாகாணத்தில் எல்லா பாகத்திலும் பரம்பரை பாத்தியமுண்டு. பரம்பரை பாத்தியமில்லாத இடங்களிலும் கூட கிராம உத்தியோகஸ்தர் ஸ்தானங்களுக்கு பரம்பரையை அனுசரித்து வார்சுகளுக்கு பாரம்பரியம் வேலை கொடுக்கப்பட்டு வருகிறது. இப்பொறுப்பு வாய்ந்த கிராம உத்தியோகங்களுக்கு பரம்பரை பாத்தியத்தை அனுசரிக்காமல் வேலைகளை கொடுத்தால் மதிப்பும் அந்தஸ்தும் செல்வாக்குமில்லாதவர்களாய் நியமனம் செய்யவேண்டி வரும். கிராம உத்தியோகங்களிலுள்ள நீதி முறைகளும் சன்மார்க்க வழிகளும் க்ஷீணமடைந்து கைக்கூலி வாங்கும் வழக்கம் வளர்ந்தோங்கும். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நற்கீர்த்தியும் நன்னீதியும் வரவர அபிவிருத்தியாக வேண்டுமென்று விரும்புகிறவர்கள் கிராம உத்தியோகங்களுக்கு பரம்பரை பாத்தியமுறை யேற்படவேண்டியதின் அவசியத்தை ஒப்புக்கொள்ளுவார்கள்.

ஜமாபந்தி.

ஜமாபந்தி யென்ற பெயருடன் வருடந்தோறும் கவர்ன்மெண்டாரால் தயாரா நடத்தப்படுகின்றது. இந்த ஜமாபந்தியினால் பொதுஜனங்களுக்காவது கிராம உத்தியோகஸ்தர்களுக்காவது ஒருவித நன்மையுமில்லை யென்றே சொல்லவேண்டும். ஜமாபந்தி என்ற பெரும்பெயர் கொண்ட வருஷ பைசலை நிறுத்தி வேறு சுலபமான முறையை ஏற்படுத்தவேண்டும். கிராம உத்தியோகஸ்தர்களை தணிக்கை நடக்கும் ஒவ்வொரு ஆபீசிலும் மூன்று நாளைக்கு அதிகமாய் தாமதிக்க செய்யலாகாது. ஜமாபந்திக்கு ஆஜராகும் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு ஜமாபந்தி அலவன்ஸ் என்ற பெயருடன் நாள் ஒன்றுக்கு ரூபாய் ஒன்றுக்கு குறையாதபடி படித்தரம் ஏற்படவேண்டும். ரயத்துவாரி கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் இனாம் ஜமீன் கிராம புரொப்ரைட்டரி கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் பாரபக்ஷமின்றி ஸ்டேஷனரி சப்ளை விஷயத்திலும் ஜமாபந்தி அலவன்ஸ் விஷயத்திலும் ஒரேவிதமாய் நடத்தவேண்டும். ஜமாபந்தி நடக்கும் காலங்களில் கிராம உத்தியோகஸ்தர்களிடம் சப்ளை பெறுமலிருக்கும்படியான மார்க்கங்களை தேடவேண்டும். கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கும் பாத்தியதைகாரர்களுக்கும் கிராம உத்தியோகஸ்தர்கள் சாமகிரியைகளை சப்ளை செய்யவேண்டுமென்றும் பின்னால் பில்கொடுத்து பணம் வாங்கிக்கொள்ளவேண்டுமென்றும் கவர்ன்மெண்டார் செய்திருக்கும் நியாயமில்லாத விதியை உடனே ரத்துசெய்யவேண்டும். இப்படி செய்யாவிட்டால் கிராம உத்தியோகஸ்தர்களும் குடிகளிடமிருந்து தாங்கள் செலவு செய்த பணத்திற்கு ஈடாகத் தாங்களும் சப்ளை கேட்டு வாங்கவேண்டியதாய் நேரிடும். கிராம உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளுக்கு வண்டி வாகனாதிகள் கொடுக்கவேண்டுமென்ற ஓர் விதியும் உண்டு இதை ஆதாரமாக வைத்துக்கொண்டு மேலதிகாரிகள் சரியான வாடகை முதலியவை கொடுக்காமல் கிராம உத்தியோகஸ்தர்களை வருத்தி வருகின்றார்கள். இந்த கெட்ட வழக்கத்தை நிவர்த்திக்கவேண்டியது கவர்ன்மெண்டின் முக்கிய கடமை.

கடமை.

சாதாரணமாய் இம் மாகாணத்தில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் நூற்றுக்குப் பதினைந்து பெயர்களே. இதிலும் கிராம வாசிகளில் எழுதப் படிக்கத்தெரிந்தவர்கள் மிகவும் சொற்பம் கிராம வாசிகளுக்கு தங்களுடைய புலத்தினளவு எல்லை, தீர்வை, முதலிய விபரங்கள் தெரியாது இக்காரணங்களால் எல்லைச்சண்டை நிலச்சண்டை முதலியவைகள் உண்டாகி கோர்ட் நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன. சென்றவருஷத்தில், கோர்ட்டு விவகாரங்களுக்காக நமது மாகாணத்தில் வாங்கப்பட்ட கோர்ட்டு ஸ்டாம்புகள், காப்பிக் காகிதங்கள் இவைகள் மொத்தச்செலவு 151-லட்சம். கிராம உத்தியோகஸ்தர்கள் கிராமவாசிகளுக்கு தெரியவேண்டிய விஷயங்களைச் சரிவரச்சொல்லி சண்டை விவகாரங்கள் ஏற்படாமல் பார்த்துக்கொண்டால் இவ்விதமான செலவு நேரிடாது. கிராமத்தார்களுக்கு கிராம உத்தியோகஸ்தர்களிடத்திலுள்ள நட்பும் நம்பிக்கையும் குறைவுபடாமல் நடந்துகொள்ளுவார்களென்று நம்புகிறேன்.

அரசியல் ஏணியில் அடிப்படையாக யிருப்பது கிராமம். ஒவ்வொரு கிராமத்திலும் படேல், ரெட்டி, மணியம் என்ற பெயருடன் இருப்பவர் கிராம ஹெட்மான் என்னும் பெரியதலைக்காரர் கிராமக் கணக்குகளை சரிவரவைத்து பொதுவாக கிராம பரிபாலனத்தில் கிராமத் தலைவருக்கு சகாயமாயும் உதவியாகவுமிருந்து வருபவர் கிராமக் கர்ணம் அல்லது கணக்குப்பிள்ளை இவர்களுக்கு ஆதியில் சம்பளம் கொடுபடாமல் சகாயமான நிலங்களும் மானிய சுதந்திரங்களும் கொடுபட்டிருந்தன. கிராம முனிசிப்புகள் ரிவினியூ வசூல்செய்வதுடன் வசூலான தொகைகளை தாலுக்கா கஜானாவிற்கு இருசால் செய்யவேண்டும். கிராமத்தில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதுடன் சிறு குற்றங்களையும் விசாரிக்கவேண்டும். கிராமத்தில் நடக்கும் பெரும் குற்றங்களைப்பற்றியும் குற்றம் செய்யக்கூடிய கூட்டத்தாரின் நடமாட்டங்களைப் பற்றியும் போலீசாருக்கு தகவல் கொடுக்கவேண்டும். சிவில் விவகாரங்களில் சிவில்கோர்ட்டு அதிகாரங்களையும் நடத்தவேண்டும்.

ஜனன மரணங்களைப் பதியவேண்டியதும் இவர்களுடைய கடமை. கவர்ன்மெண்டு ஜலாதாரங்களிலிருந்தும் நீர்ப்பாசனங்களிலிருந்தும் குடிகளுடைய நிலங்களுக்கு சரியாய் ஜலம் சப்ளை செய்யப்படுகின்றதாவென்பதைப் பார்ப்பது இவர்கள் கடமை. இவ்வளவு வேலைகளுக்குமாக இவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளமோ மிகவும் சொற்பம்.

முடிவுரையாகப் பேசுகையில் கிராம உத்தியோகஸ்தர்கள் யாவரும் ஒற்றுமையுடனிருந்து சங்கத் தீர்மானங்களை உறுதியாகக் கடைப்பிடித்து நடத்தவேண்டுமென்று சொல்லி பிரசங்கத்தை முடித்தார்.

தலைவர் பிரசங்கம் முடிந்தபின் மகாநாட்டுக்கு வரக்கூடாமைக்காக வருந்தி ஸ்ரீமான்கள் எஸ். சத்தியமூர்த்தி ஐயர், சி. வி. வெங்கட்டரமணய்யங்கார், ராமநாதபுரம் ராஜா முதலியோரிடமிருந்து வந்திருந்த கடிதங்கள் மேற்படி சங்கக் காரியதரிசியால் படிக்கப்பட்டபின் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்கள்.

1 மாட்சிமை தங்கிய ராஜ சக்ரவர்த்தியார் அவர்களுக்கு இம்மகாநாடு தங்களுடைய மனமார்ந்த ராஜ விசுவாசத்தை தெரிவித்துக்கொள்ளுகிறது

2 பரம்பரை பாத்தியதையில்லாத கிராமங்களுக்கும் மேற்படி பாத்தியதையை தருவதற்காக ஸ்ரீமான் எஸ் முத்தையா முதலியார் அவர்களால் சட்ட சபையில் கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதாவை இம்மகாநாடு முழுமனதுடன் ஆதரிப்பதுடன், அம்மசோதாவை சட்டமாக்கும்படியும்,

3 பற்பல டிபார்ட்டுமெண்டு உத்தியோகஸ்தர்கள் வரவர கிராம உத்தியோகஸ்தர்களை அடிமைகளைக்காட்டிலும் கேவலமாக நடத்துவதை இம்மகாநாடு கண்டிப்பதுடன் இவ்விஷயத்தில் பொறுப்பற்று நடந்துகொள்ளும் உத்தியோகஸ்தர்கள் விஷயத்தில் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமென உத்தரவு பிறப்பிக்குமாறும்,

4 இம்மகாணத்திலுள்ள கிராம உத்தியோகஸ்தர்கள் தங்களுக்காக இரண்டு மெம்பர்களை சட்டசபைக்கு தேர்ந்தெடுக்குமாறு உத்தரவு செய்யும்படியும்,

5 சர்க்கார் அலுவலின்பேரிலாகிலும் எந்த இலாகா உத்தியோகஸ்தர்களாலாவது சம்மன் மூலமாய் வரவழைக்கப்படும்போதெல்லாம் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு இரண்டாவது வகுப்பு பிரயாணப்படி கொடுக்கவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கவேணுமாயும்,

6 கிராம பஞ்சாயத்து கோர்ட்டிலும், கிராம பஞ்சாயத்திலும் கிராம உத்தியோகஸ்தர்களை உத்தியோகப்பற்றுள்ள அங்கத்தினர்களாக இருக்கும்படி மேற்படி சட்டங்களை திருத்துமாறும்,

7 கிராம உத்தியோகஸ்தர்களுடையவும், சிப்பந்திகளுடையவும் சம்பளத்தை உயர்த்த சட்டசபையில் தீர்மானம் செய்யப்பட்டிருந்தும், தள்ளிக் கொடுக்கப்பட்டிருக்கும் மாகாணக் கப்பத் தொகையிலிருந்து கிராம உத்தியோகஸ்தர்களுடைய சம்பள உயர்வுக்காக யாதொரு ஏற்பாடும் செய்யாதிருப்பதைப்பற்றி இம்மகாநாடு வருத்தப்படுவதுடன் அடுத்த சட்டசபைக் கூட்டத்திலாவது கிராம உத்தியோகஸ்தர்களுடைய சம்பளங்களை உயர்த்த வேண்டிய ஏற்பாடு செய்யுமாறும்,

(b) ஜமீன்தாரி கிராம உத்தியோகஸ்தர்கள் சம்பளத்தைக் கவர்ன்மெண்டு கிராம உத்தியோகஸ்தர்களுக்கு ஒப்பாக்கும் உயர்த்திக்கொடுக்கவேண்டியதென்று சட்டசபையில் பாசாகியும் இதுவரை அமுலுக்குக் கொண்டுவராமலிருப்பதைப்பற்றி இம்மகாநாடு விசனிப்பதுடன் இப்போதிருக்கும் சம்பளத்துடன் அதிகமாக்கும் சம்பளத்துக்கு பர்த்தியாக அந்தந்த ஜமீன் பழக்கவழக்கங்களை அனுசரித்து மானிய சுதந்திரங்களைக் கொடுத்துவிடும்படிக்கும்,

8 வீடில்லாத கிராமவாசிகளுக்கு வீடுகட்டிக்கொள்வதற்காக வேண்டிய காலி இடங்கள் தர்காஸ்தில் [illegible] ஒப்புவிக்குமாறும்,

223467

9 ஏற்கனவே சர்வே பயிற்சிபெற்ற கர்ணங்களை ரிவினியூ அதிகாரிகளின் சிபார்சின்பேரில் திரும்பத்திரும்ப சர்வே பயிற்சிக்காக அனுப்பும் வழக்கத்தை ஒழித்துப்போடுமாறும்,

10 கர்ணங்களும் லோகல் போர்டுகளுக்கு தேர்தலில் நிற்கக்கூடியவாறு லோகல் போர்டு சட்டத்தை திருத்துமாறும்,

11 மேட்டூர் தேக்கத்தின் நிமித்தம் வேலையிழந்துபோன கிராம உத்தியோகஸ்தர்களுக்கு புது கிராமங்கள் ஏற்படுத்தி வேலை கொடுக்கவேண்டுமென்றும் அது சாத்தியமில்லாவிடில் தகுந்த நஷ்டஈடு செய்துகொடுக்கும்படிக்கும்,

12 சென்ற பல வருஷங்களாகத் தப்பிதமன்னியில் வேலைபார்த்து வந்த பல கிராம உத்தியோகஸ்தர்களை ஸ்பெஷல் டெஸ்டு பாஸ் செய்யாத நிமித்தம் பல்லாரி ஜில்லாவில் திடீரென வேலையை விட்டு நீக்கினதை இம்மகாநாடு கண்டிப்பதுடன் அவர்களை மறுபடியும் வேலையில் அமர்த்துமாறும்,

13 முனிஸிபல், யூனியன், டவுன்களிலிருக்கும் கிராம உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளத்துடன் ஸ்பெஷல் அலவன்ஸ் கொடுக்க உத்தரவு செய்யும்படியும், காருண்ய கவர்ன்மெண்டாரையும் கனம் சட்டசபை மெம்பர்களையும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

14 வருஷ சந்தா ஒரு ரூபாயில் ஓர் மாதாந்தப் பத்திரிகையை நடத்துமாறு இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

15 அடியிற்கண்ட மெம்பர்களை மாகாணச் சங்கத்தின் விதிகளைத் திருத்தி அடுத்த கூட்டத்திற்கு அங்கீகாரத்திற்கு கொண்டுவருமாறு இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

1 பி. சுப்பையா பிள்ளை பிரசிடெண்டு, 2, வி. ராமானுஜ தாத்தாச்சாரியார் வி. எம். வளூர் காரியதரிசி, 3, குருமூர்த்தி அய்யர் வி எம் அலப்பாக்சேரி 4, சொக்கப்பா முதலியார் கர்ணம் நெய்குப்பை, 5, ஸ்ரீநிவாசவரதாச்சாரி, வி. எம். கப்பியாம்புலியூர்

அடியிற்கண்ட மெம்பர்களை இம்மாதம் 18-ந் தேதியன்று கனம் ரெவின்யூ மெம்பர்களைப் பேட்டிகண்டு நம் குறைகளை எடுத்துரைக்குமாறு இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பி. சுப்பையாபிள்ளை, வி ராமானுஜ தாத்தாச்சாரியார், ஸ்ரீ நிவாசவரதாச்சாரியார், எஸ். சொக்கப்பா முதலியார், ராமசாமி அய்யர், அழகியமணவாளபிள்ளை, விஜயசாமித்தேவர், ராமசாமிபிள்ளை, ரங்கராஜய்யர், சிக்கந்தர் பாச்சா அம்பலம், வீரநாகமநாயுடு, குருமூர்த்தி அய்யர், இன்னும் சில மெம்பர்களைச் சேர்த்துக்கொள்ள மேற்படியார்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கிராம உத்தியோகஸ்தர்களைக்குறித்த மசோதா ஆக்ட்.

1927-ம்௵த்து 20-வது மசோதா ஆக்ட்.

இந்த மாகாணத்தின் பெரும்பான்மையான பாகங்களில் கிராமப் பெரியதனக்காரர் உத்தியோகமும் கர்ணம் உத்தியோகமும் பரம்பரையானவைகளாயிருக்கிறபடியாலும், இந்த உத்தியோகங்களை வகித்துவரும் உரிமை மாகாணமுழுவதும் ஒரே மாதிரியாயிருந்து வருவது உசிதமாயிருக்கிறபடியாலும், இதனால் விதிக்கப்படுகிற தென்னவென்றால்:--

1. இந்த ஆக்ட், கிராம உத்தியோகஸ்தர்களைக்குறித்த 1927-ம்௵த்து ஆக்ட் என்று சொல்லலாம்.

2. தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, சேலம், நீலகிரி, தென்கன்னடம் ஜில்லாக்களிலும், கிராம பெரியதனக்காரர் உத்தியோகமும் கர்ணம் உத்தியோகமும் ஏற்கனவே பரம்பரையானவைகளாயிராத இந்த இராஜதானியைச்சேர்ந்த இதர பாகங்களிலுமுள்ள ஷை உத்தியோகங்கள் இதனால் பரம்பரையானவைகளாய் ஏற்படுத்தப்படுகின்றன; மேலும், ஷை உத்தியோகங்களை இப்போது சாசுவதமாய் வகித்துவருபவர்கள் அந்தப்படி பரம்பரையாய் அந்த உத்தியோகங்களில் இருந்து வருபவர்களாகக் கருதப்படுவார்கள்.

3. 1895-ம்௵த்து 2-வது ஆக்டாகிய சென்னைப்பட்டணம் பரம்பரையான கிராம உத்தியோகங்களைப்பற்றிய ஆக்டில்கண்ட நிபந்தனைகள் 2-து பிரிவில் குறிப்பிட்டிருக்கும் உத்தியோகங்களுக்குப் பிரயோகப்படும்.

இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

இந்த மாகாணத்தின் முக்கால்பாகத்துக்குமேற்பட்ட இடங்களில் கிராமப் பெரியதனக்காரர் உத்தியோகமும் கர்ணம் உத்தியோகமும் பரம்பரையான உத்தியோகங்களாயிருக்கின்றன. ஆகவே அவைகளை வகித்துவரும் உரிமை இந்த மாகாண முழுவதும் ஒரேமாதிரியாய் இருந்துவருவது உசிதமாகும். மேலும், இதுவிஷயத்தில் எவ்விதமான வித்தியாசமும் காட்டுவதற்கு நியாயம்இல்லை. யாதொரு உத்தியோகம் காலியாகும்போதெல்லாம், அந்த உத்தியோகத்தை அடைவது விஷயமாய் விரும்பத்தகாத போராட்டம் ஜனங்களுக்குள் உண்டாகாதபடி தடுப்பதும் உசிதமாகும். இந்த நோக்கங்களைக்கொண்டே இந்த மசோதா ஆக்ட் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

1927-ம்௵ பிப்ரவரி௴ 7௳

(Sd) எஸ். முத்தய்யா முதலியார்.
(Sd) பி. சீதாராமய்யா,
கவர்ன்மெண்ட் செக்ரெடரி, லா (லெஜிஸ்லெடிவ்) டிபார்ட்மெண்ட்.

தென் இந்தியக் கோயில்கள்.

திராக்ஷாராமம்.

(ஸ்ரீமான் P. V. ஜகதீச ஐயர், சூப்பரின்டென்டெண்டு, ஆர்கலாஜிகல் டிபார்ட்மெண்டு சென்னை.)

(Copy Right.)

(193-வது பக்கம் தொடர்ச்சி)

தற்காலம் செல்லுவதாக தெரியவருகிறது. பன்னிரண்டு வருஷங்களுக்கொருமுறை "புஷ்கர"மெனப்படும் ஸ்நான விசேஷம் இவ்விடத்தில் நேரிடுகிறது.

பல சிலாசாஸனங்கள் இக்கோயிலிலிருந்து வருகின்றன. பதினொன்றாம் நூற்றாண்டில் ராஜமஹேந்திரபுரத்தை ஆண்ட சோழராஜன் ராஜராஜனது ஒன்று இருந்துவருகிறது. பராந்தகராஜன் அக்காலத்திய இந்நாட்டு பூகோள பிரிவுகளை குறிப்பிட்டிருப்பதுடன் சிவன் பார்வதி பிம்பங்களை ஸ்தாபித்ததும் தங்க கலசம் ஏற்படுத்தியதும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நாகூர் மீராசாயபு காலத்திலிருந்த மேற்கே மெடினாவிலிருந்து ஒரு துலுக்க சந்நியாசி இவ்விடம் வந்து மருதிகட்டிக்கொண்டு வாசம்செய்தனராம். இது ஐந்நூறு வருஷங்களுக்கு மேலாகின்றன. டச்சு தேசஸ்தர்களும் கி. பி. 1675—1728 இவ்வருஷங்களில் இவ்விடத்தில் தங்கியிருந்து அவர்களது மருதிகளும் "ஒலந்துதிப்பா" என்னும் பெயருடன் வழங்கிவருகின்றன.

பிழை திருத்தம்:- சென்ற சஞ்சிகை 193 வது பக்கத்தில் "மகாபலிபுரம்" என்று இருப்பதை "திராக்ஷாராமம்" என்று திருத்தி வாசித்துக்கொள்ளவும்

தற்கால நிலைமை.

ஓர் சம்பாஷணை.

ஸ்ரீமான் இராஜகோபாலய்யங்கார்.

சாஸ்திரிகள்:—என்ன நிரஞ்சனர்வாள் எங்கே வெகுநாளாக இந்த திக்கிலேயே காணோம். சௌக்கியந்தானே.

நிரஞ்சனர்:—எல்லாம் பெரியவாள் ஆசீர்வாதம் இதுவரையில் யாதொரு குறைவுமில்லை.

சாஸ்திரிகள்:—தாங்கள் சொல்லியபடி கிராமானுகூலன் பத்திரிகையை வரவழைத்துக் கொண்டிருந்தேன். அதுவும் நின்றுபோய் விட்டதிலிருந்து எனக்கு உலகஞானமே கொஞ்சங்கூட தெரிந்து கொள்ளமுடியவில்லை. அதற்கனுகுணமாக தங்கள் தெரிசனமும் கிடைக்கவில்லை. என்ன காரணம் கிராமானுகூலன் பத்திரிகை நின்றுவிட்டதே.

நிரஞ்சனர்:—எல்லாம் பகவத் சங்கல்பம். ஹரி ஹரப்பிரம்மாதிகளையும் காலவாகனன் விடுகிறதில்லை அவர் ஆதிபத்தியம் வந்தவுடன் அவர் அதிகாரத்தை நடத்தியே தீருவார். அதேமாதிரி நமது கிராமானுகூலன் பத்திராதிபரும் காலத்தின் கொடுமையால் பாதிக்கப்பட்டு பத்திரிகை சுவல்பகாலம் நிறுத்திவிடநேர்ந்தது. இப்போது மறுபடியும் ஆரம்பித்து நடத்திவருகிறார். தங்களுக்கும் விஞ்ஞாபனம் செய்துகொள்ளுவார்.

சாஸ்திரிகள்:—அப்படியா ரொம்பவும் சந்தோஷம். எல்லாம்வல்ல இறைவன் அவ்னோர் இன்னல்களைத் தீர்த்து மென்மேலும் நன்மையும் பெருக அருள்புரிவாராகுக.

ஸரி அதிருக்கட்டும். மகாத்மா காந்தி இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறார். எங்கிருக்கிறார்.

நிரஞ்சனர்.—மகாத்மா காந்தியா! ஏன் தங்களுக்குத்தெரியாதா!! இந்த மாதம் முழுவதும் நம்முடைய தமிழ்நாட்டில் ஊர் ஊராக வந்து பிரசங்கம் செய்து கதர் நிதிக்கு தொகை வசூலித்துவருகிறார். இதுவரையில் சற்றேறக்குறைய இரண்டு லட்சம் ரூபாய் வசூலாகியிருக்கிறது. இன்னும் வசூல் செய்துகொண்டே போகிறார்.

சாஸ்திரிகள்:—அப்படியா சமாச்சாரம். எல்லாம்சரிதான் இவ்வளவு லட்சங்களுக்கான திரவியத்தையெல்லாம் தேடி என்னசெய்யப்போகிறார்.

நிரஞ்சனர்:—ஏன் இரண்டு கூலிகூட கிடைக்காமல் வேலையில்லாது கஷ்டப்படும் பிரதேசங்களில் இந்த திரவியத்தைக்கொண்டு பருத்திவாங்கி கையினால் நூல்நூற்று நெசவு நெய்யும்படி செய்வித்து அவ்வேழைகளுக்கு வயிற்றுக்கு அன்னமளிக்க உபயோகிக்கப்போகின்றார். அவ்விதம் செய்வதினால் (1) இந்தியர்களாகிய நம்முடைய சகோதர சகோதரிகள் யாவரும் கதராடை அணியும்படிசெய்துவிடுகிறார். (2) நமக்குத்தேவையானவற்றை நாமே தேடிக்கொள்ள முடியுமென்று நிரூபணம் செய்து காட்டுகிறார். (3) ஏழைகளென்றும் பிரபுக்களென்றும் வித்தியாசம் பாராட்டுதற் கறிகுறியாக விருந்த அன்னிய ஆடைகளை பஹிஷ்கரித்து நம்தேசத்தின் வறுமைப்பிணியை அடியோடு களைந்துவிட வழிதேடுகின்றார். (4) விவசாயிகளுக்கும் ஏழைக்குடியானவர்களுக்கும் அலைந்து திரிந்து திரவியந்தேட இயலாத வயோதிகர்களுக்கும் ஓய்வு நேரங்களை வீணே கிலவழிக்காமல் ஒரு சுவல்பசம்பாத்தியமாவதுஏற்படக்கூடியதான குடிசைத்தொழில் இது என்றும் நம்மிந்தியர்கள் முப்பத்து மூன்றுகோடி மக்களில் ஒரு பகுதியினரேனும் மனம்வைத்து இத்தொழிலைக் கைக்கொள்வார்களாகில் நம்மிந்திய மக்களல்ல, மற்றுமிவ்வுலகிலுள்ள மனுஷ்யகோடிகள் பூராவிற்கும் உடையளிக்கக் கூடும் என்பதை நிரூபித்துக் காட்ட முயர்சிக்கின்றார். (5) ஏழை விவசாயிகளிடம் ஏமாற்றி அவர்கள் திரேகசிரமத்தினால் தயாரித்த பருத்தியை ஒரு சுவல்பவிலைகொடுத்து வாங்கி ஆறுயிரம் மைலுக்கப்பால் கொண்டுபோய்

அவ்விடத்துள்ள ஏழைகள் பிரபுக்கள் யாவருக்கும் பணத்துடன் பணம் தேடிக்கொடுத்து கொள்ளைலாபத்துடன் திரும்ப அவைகளை சவரூபத்தைமாற்றி உடைகளாக தயாரித்து ஏற்கனவே ஏமாற்றப்பட்ட நம்மேழைச்சகோதரர்களிடமே கொண்டுவந்து ஒன்றுக்கு பதின்மடங்கதிகமான விலைக்கு விற்கப்படுவதை நிறுத்திவிட வழிதேடுகிறார்.

சாஸ்திரிகள்:—என்ன நிரஞ்சனர்வாள் இதுவெல்லாம் அவர்கள் அபிமானம் குறைந்து விடுமோ அல்லது இவ்வித காரியங்கள் நிரூபணம்செய்துகாட்டுவதால் எல்லோருக்கும் அம்மாதிரி ஞானபாவம் அடைந்து கதர் உடை தயாரிக்கவும் அணிந்துகொள்ளவும் தயாராயிருப்பார்களா? ஏன் இந்த பிரேமை கொண்டலைகின்றார்.

நிரஞ்சனர்:—தாங்கள் சொல்வது ஒருவிதத்தில் சரியே. நம்முடைய பூர்வாச்சாரியர்களாகிய சங்கராச்சாரியார், ராமானுஜாச்சாரியார், மத்வாச்சாரியார் ஸித்தார்த்தர் (புத்தர்) முதலானோர் தாங்கள் செய்த வேதாந்தப் பிரசாரத்தினால் எல்லா ஆன்ம கோடிகளும் மோக்ஷசாம்ராஜ்யத்தை அடையவேண்டும் என்ற மகாகருணையுடன் கூட எவ்வளவோ உபதேசித்து அருளினார்கள். அதன்படி எல்லோரும் அனுஷ்டிக்காவிட்டாலும் ஒரு சுவல்ப ஜனங்களாவது அவர்களின் உபதேச மொழிகளுக்கு செவிசாய்த்து இம்மைக்கும் மறுமைக்கும் உலகுளோர் போற்ற வழிதேடினார்கள். அதுவேபோல் எல்லா இந்தியரும் அவர் வழிப்பட்டு கதர் ஆடை பக்தியில்லாமலிருந்தபோதிலும் புழுவைக் குளவிதன்னைப்போலாக்குவதுபோல் தன் அன்பான பிரியவசன உபதேசங்களினால் அரசாங்கத்தாரையும் கதராடையில் நம்பிக்கை ஏற்படச்செய்து குடிசைத்தொழில்களில் முதன்மையானது கதர் என்று ஒப்புக்கொள்ளும்படி செய்துவிட்டார். அதேமாதிரி விடாமுயற்சியினால் எல்லோரையும் கதரணியச்செய்து விட்டால் அந்நிய ஆடை பஹிஷ்காரம் தானாகவே நிறைவேறிவிடும்.

சாஸ்திரிகள்:—தாங்கள் சொல்வது. எனக்கு ஸரியென்று தோன்றவில்லை. அவர் நடத்திய ஒவ்வொரு இயக்கமும் ஒன்றுகூட நடைபெறவில்லை என்பதே என் அபிப்பிராயம். மதுபானங்கூடாதென்றாரே அதை நிறுத்தமுடிந்ததா.

நிரஞ்சனர்:—அரசாங்கத்தாரின் அடிமடியில் கைபோடுவதாகவிருப்பதால் அவர்களுடைய பொக்கிஷம் வறண்டுவிடக்கூடுமென்ற எண்ணத்துடன் அரசாங்கத்தார் அதை நிலைபெறவொட்டாது பலவித பகட்டான வார்த்தைகளினாலும், உள்ளரச்செய்யும் பலவித சிறைவாசத்தண்டனை முதலியவைகளினாலும் மறியல்வேலை நடைபெறாமல் செய்துவிட்டார்கள். இப்போது [illegible] பெரும்பாலோர் அதற்காக கிளர்ச்சி செய்ததின் பயனாக மதுபானத்தை அடியுடன் ஒழித்துவிடுதல் அவசியம் என்றும் ஆனால் ஏககாலத்திலகூடாது கொஞ்சம் கொஞ்சமாக ஒவ்வொரு ஜில்லாவாக மதுபானத்தை ஒழித்துவிடுவதாகவும் ஒப்புக்கொள்ளும்படி ஏற்பட்டிருக்கிறது. இக்கிளர்ச்சியை பூரணமாய் வற்புறுத்துவார்களாகில் கூடியசீக்கிரம் மதுபானம் நம் இந்தியாவிலேயே இல்லாமல் செய்துவிடலாம்.

சாஸ்திரிகள்:—அதிருக்கட்டும் அதென்ன மகாத்மா காந்தி ஸநாதன ஹிந்துவென்றும் ஹிந்து மதத்தில் அத்யந்த பக்தியுள்ளவனென்றும் சொல்லிக்கொண்டு நம்முடைய சாஸ்திரங்களில் அனுமதிக்கப்படாத விதவாவிவாகத்தை அனுஷ்டிக்கும்படி உபதேசிக்கிறார் இது சாஸ்திர சம்மதமில்லாத காரியமல்லவா. இதை அனுமதித்தால் கேவலம் சாஸ்திர நாசனமாகாதா.

நிரஞ்சனர்:—சாஸ்திரிகளே! ஆய்ந்தோய்ந்து பாராதான் காரியம் தான் சாயந்தடைவது என்னும் பழமொழியை கேட்டிருப்பீர்கள். அதன்படி ஒவ்வொருகாரியத்தையும் ஆய்ந்தோய்ந்து பார்க்கவேண்டும். ஒவ்வொரு காரியத்தைச் செய்யும்போதும் சுருதி, யுக்தி, அனுபவங்களுக்கு ஒத்ததாக யோசித்து செய்யவேண்டும். நான் அதிகப்பிரசங்கியாகச் சொல்லுகிறேன் என்று எண்ணாமல் சற்றுதயவு செய்து பரியாலோசனை செய்யவேண்டும்.

தொடரும்.

ம து க ர மா னி னி.

(ஸ்ரீமான் S. S. ராஜகோபால அய்யங்கார், B.A., B.L.,)

(All Rights Reserved)

196-வது பக்கம் தொடர்ச்சி.

வன:—ஐயா, ஐயா, இவளுக்கு சும்மா நாடோடியான குறியாச்சொல்லுங்க. நல்லதாக சொல்லிவிடாதீங்க.

குறி:—உங்களிரண்டுபேர் அதிர்ஷ்டமும் ஒரே மாதிரியாகத்தானிருக்கிறது.

சல:—எப்படி ஐயா, எப்படி. விவரஞ்சொல்லுங்க.

குறி:—எல்லாம் சொல்லியாய்விட்டது.

சல;—அவளதிர்ஷ்டத்திற்குமேலே என்னதிர்ஷ்டம் நாலுகூட அதிகமில்லையா ?

வன:—ஆ! தெய்வந்தான் நமக்கு நல்லபுத்திகொடுக்கணும். வாங்க, அமலனுக்குச்சொல்லுங்க தாயே, சந்தான தேவி, அவனுக்கு நல்ல தட்டுவாணியாக பெண்டாட்டி வரணும், உன்னை வேண்டிக்கிறேன் ! அவளும் தொலையணும் ; இன்னொருத்தி அவனுக்கு மேலே தட்டுவாணி வரணும், அவளும் தொலையணும் இப்படியே தொலைஞ்ச, தொலைஞ்ச மேலே மேலே தட்டுவாணியாகவே வந்து கடைசி 'தட்டுவாணி கொமாளம் அடிச்சிகிட்டு அவன் பாடைக்குப் பின்னாலே போகணும், தாயே ! சந்தான தேவி, நான் வேண்டிக்கிறதை எதைக் கேக்காமே போனாலும் இந்த சின்னவரமாவது கொடுக்கவேணும்படி அம்மாதாயே! நான் வேண்டிக்கிறேன்.

சல:—அப்படியே ஆகவேணும். அம்மா தாயே! எல்லாரும் வேண்டிக்கிறோம். இதையாவது கேளடி அம்மா! நல்லாயிருக்கிற ஆம்படையானுக்கு ஊரிலே மேயற பெண்டாட்டி இருந்தா பாக்க மனம் சகிக்குமா? அப்படிப்போலே அவ்ஷ்டக் காலாடியாயிருக்கிற ஆம்படையானை வய்க்காத பெண்டாட்டியிருந்தால் அதுவும் பார்க்கச் சங்கடமாத்தானேயிருக்கும் தாயே மரியாதைக்குறைவு வைக்காதே. இவனுக்கும் சரியானபடி அளந்துவிடு.

வன:—அப்படியேயாகணும்.

இங்கி:—சும்மா யிருங்கள், மதுகரன் வருகின்றான்.

வன:—அவரல்லஐயா, ராசாத்தியம்மா அல்லவா வாராங்க.

(மானினி வருகின்றாள்)

மானி:—என் துரையைக் கண்டீர்களா?

இங்கி:—இல்லையம்மா.

மானி:—அவர் இங்கே வரவில்லையோ?

வன:—இல்லையம்மா.

மானி:—அவர் சந்தோஷமாகத்தானிருந்தார் ; திடீரென்று அவருக்கு ரமணபுரி ஞாபகம் வந்துவிட்டது. இங்கிதா.

இங்கி:—அம்மணி:-

மானி:—அவரைத்தேடி இங்கே அழைத்துக்கொண்டுவா அமலன் எங்கே போனான்?

அமலன்:—இதோ இருக்கிறேனே காத்துக்கொண்டு எசமான் இதோ வருகிறாரே!

மானி:—அவர் கண்களில் நாம் தென்படவேண்டாம். போவோம் வாருங்கள்.

(மானினி, இங்கிதன், வனசம், சலசம், அமலன், குறியுரைப்போன், பாலரும் சென்றுவிடுதல்)

(மதுகரன் ஓர் தூதவனுடனும், கையாட்களுடனும் வருதல்.)

தூது:—ஐயா! தமது மனைவியார் உத்தமி அம்மாளே முதலில் சண்டைக்கு ஆரம்பித்தது.

மது:—எனது சகோதரனும் மாலனை எதிர்த்தா?

தூது:—ஆம், ஐயா; ஆனால் அச்சண்டை சீக்கிரம் நின்றுவிட்டது. காலத்தை உத்தேசித்து அவர் இருவரும் தம் படைகளை ஒன்றுசேர்த்துக் கருணாசனை எதிர்க்கலானார்கள். அவர் இவர்களை எதிர்த்த மாத்திரத்தில் அவரே வெற்றிபெற இவர் நீத காட்டினின்றும் ஓடிவிட்டனர்.

மது:—முடிவான பெருங்கேட்டைச் சொல்லிவிடு.

தூது:—ஐயா, கேடுரைப்பவரும் கெட்டவராகத் தோன்றுவரோ!

மது:—புத்தியில்லாதவனிடத்திலாவது பயங்காளியிடத்திலாவது சொன்னாலல்லவோ. அப்படியாவது; சொல்லப்பா, சமாசாரங்கள் எல்லைமீறி நடந்துவிட்டன

போதும். என் சந்நிதிகேள், என்னிடத்தில் எவன் உண்மையைச் சொன்னாலும் சரி. அவனை இச்சகம் பாடுவோனை மாந்தர் விரும்பிக்கேட்பதுபோல் கேட்பேன்.

தூது:—ஐயா, இலவணன். (இது அருமையான சமாசாரம்) இலவணன் தனது பார்த்திபநாட்டுச்சேனையுடன் வந்து சிற்றசியா தேசத்திலுள்ள தமது நாடுகளில் இந்திரா நதிக்கரையிலிருந்து தன்னாட்டுடன் சேர்த்துக்கொண்டு விட்டனன். சரசநாடு தொட்டு இலாகவநாடு வரையிலும், பின் அமிர்த நாட்டிலும் அவன் வெற்றிக்கொடி பறக்கலாயிற்று; 'அப்பொழுதோ:-

மது:—"அப்பொழுதோ-மதுகரன்" என்று ஆரம்பிப்பாய்.

தூது:—ஆகா, பிரபுவே!

மது:—சனங்கள் சொல்லிக்கொள்வதை மறைபொருளாகச் சொல்லாமல் நேராகச்சொல். மானினியை ரமணபுரியில் யாது சொல்கின்றனரோ, அதைச்சொல். உத்தமி அவளைத் திட்டுமாறே திட்டு. உண்மையும் சாத்திரமும் உனக்கு எவ்வளவு பலம் கொடுக்குமோ அப்பலத்தோடும் கூடிய சுவாதந்திரத்துடன் என் தவறுகளுக்காக நீ என்னை இகழலாம். ஆரோக்கியமான காற்றுகள் விரைந்தடித்துப் பூமியை ஆரச் செய்து நற்பலனளித்து கோரைகளையும் பூண்டுகளையும் படராவாறு செய்வதுபோல் மாந்தர்களின் குற்றங்களை எடுத்துக்காட்டி இகழ்வது துன்மார்க்கத்தை யகற்றி நன்மார்க்கத்தை விளைவிக்கும் உழவாகின்றது. அப்பா, தயவுசெய்து நீ சற்றுநேரம் சென்றுவா.

தூது:—அப்படியே தமது சித்தப்படி செய்கின்றேன்.

மது:—சிங்கபுரியிலிருந்து வந்திருக்கும்சமாசாரம் என்ன? யாரடா அங்கே?

1-வது கையாள்:—சிங்கபுரியிலிருந்து வந்திருப்பது யார்? அப்படி யாராவது இங்கே உண்டா?

2-வது கையாள்;—அவன் தங்கள் உத்தரவை எதிர்பார்த்து நிற்கின்றான்.

மது:—அவன் வரட்டும். இம்மறவநாட்டுப் பிணிப்பை நானறுத்துக்கொளுத்தவேண்டும், இல்லையேல்

சபலம்:—மோகமெனும் சங்கலம் என்னை முழுகவடிக்கும்

(வேறு ஒரு தூதுவன் வருகின்றான்.)

மது—நீ யாரப்பா?

2-வது தூது:—ஐயா, தமது மனைவி உத்தமி இறந்தனள்.

மது:—அவள் எங்கே இறந்தது?

2-வது தூது:—சிங்கபுரியில் அவர் இறந்தனர். அவர் எத்தனை காலம் வியாதியால் பீடிக்கப்பட்டு இருந்தார் என்பது இன்னும் தமக்கு முக்கியமாகத்தெரிந்துகொள்ளவேண்டிய சமாசாரங்களும் இதில் அடங்கியிருக்கின்றன. (ஓர் கடிதத்தை நீட்டியவண்ணம்)

மது:—என்னை தனித்துவிட்டுச் செல்.

(2-வது தூதுவன் சென்றுவிடுதல்.)

ஆவிபோ யகன்றதந்தோ அதுவன்றே விழைந்தேனானும்
தாவிமுன் னுதைத்த வொன்றைத் தாம்பெற எண்ணுவார்
மேவிய இன்பந்தன்னை - மதமிலா அவதியென்றே [கன்
பாவிப்பர் எண்ணுள்செல்லப் பார்தனில் வாழுமாந்தர்.

சிறந்ததோர் ஆவியகன்றது, அப்படியாகவேணுமென்றல்லோ நானும் விரும்பினேன். நானும் அவமதித்து பலகாலும் உதைத்துத்தள்ளிய பொருளைப் பின் அடையவேண்டுமென்று விரும்புவது உலகோர்கள் சகசமாக இருக்கின்றதே: இதுகாறும் சுகமெனக்கொண்டபொருள் காலமாறுதலால் துன்பமேயாகின்றது:- அவள் இறந்த பிறகு நல்லவளாகின்றனள். அவளையகற்றிய இச்சை இப்பொழுது அவளை மீட்க விரும்புகின்றது. என் மனதை மயக்கும் இவ்விசார சாங்கனையை யான் அகன்று செல்லவேணும்.

நான் இவ்வாறு சோம்பி நிற்பது இப்பொழுது நேரில் காணப்படும் தீங்குகளேயல்லாமல் இன்னும் பல்லாயிரம் தீங்குகளும் விளைவதற்கு இடமாகும்.

(இங்கிதன் திரும்ப வருகின்றான்.)

இங்கி:—ஐயா, என்ன தேவை?

மது:—நான் இவ்விடம் விட்டகன்று விரைந்து செல்லவேண்டும்.

இங்கி:—அப்படியாயின் நமது ஸ்திரீகளையெல்லாம் நாம் கொல்லப்புகுகின்றோம். அவிசுவாசம் அவர்களுக்கு இயமன் போலாகுமன்றோ? நமது பிரிவெனும் சொல் அவர்மரணத்தைக் குறிக்கும் சொல்லாகும்.

மது:—நான் போகத்தான் வேண்டும்.

இங்கி:—தக்க சிறப்பந்தம் ஏற்பட்டாலன்றி மாதரை மரணத்துக்குள்ளாக்குவது தகாது. காரணமில்லாது அவர்களை யகற்றுவது பரிதாபமளிக்குமன்றோ? ஓர் பெரிய காரியத்தைவிட மாதர்கள் சிறந்தவரென்று எண்ணுவது தகுதியற்றதே. மானினியின் காதில் இச்செய்தி கொஞ்சம் விழுமாயின் தட்சணமே அவள் உயிர் துறப்பாள். இக்காரியத்திலும் எளியகாரியங்களுக்காக முன் பலமுறை அவள்

உயிர்விடத்துணிந்து நின்றதை நானறிவேன். வெகு சீக்கிரத்தில் உயிர்விடக்கூடியவள் போல் காணப்படும் தன்மையைப் பெற்றிருக்கின்றாள். மரணம் அவளைக் கொல்லாதிருத்தலின், மரணத்தினிடத்தில் அவள்பால் அன்பைக்காட்டும் குணம் மிதமா இருக்கின்றதுபோலும்.

மது:-அவள் ஆடவர் அறியக்கூடாத தந்திரசாலி.

இங்கி:-ஐயா!

கட்டளைக் கலித்துறை.

சோரான வன்புநிறை கொண்டதைத்த நெருக்கிடுமைப்
போரான காலின்பெரு மூச்செறிந்து பிலம்புதுவான்
வாரார் கருங்கட் கடையின் நீரிழுப்ப இளையனிர்
நீராத இன்பம் கிட்டாதவன் தன்திருவருளே.

ஆடடா! அப்படியல்லவேயல்ல, ஐயா, அவளது மனோபாவங்கள் உண்மையான அன்பெனும் பொருளால் ஆக்கப்பட்டிருக்கின்றன. அவள் கண்ணீரையும் பெருமூச்சையும், கண்ணீரென்றும் பெருமூச்சென்றும் சொல்லத்தகாததாகும். பஞ்சாங்கங்களில் நாம் படிக்கும் பெருங்காற்று மழைகளினும் அவை தீவிரமானவை. இதையோ தந்திரமென்பது, அப்படியாகுல் பிரகஸ்பதியெனும் தேவனைப்போல அவளும் தனது கட்டளையினால் மழையை அழைக்கக்கூடியவளாவள்.

மது:-நான் அவளைக்காணுமற்றானிருந்தேனே!

இங்கி:-நாமவளைக் காணுதிருந்தால் சிறந்ததோர் உருவத்தைக்காணுதவராவீர்; அந்த பாக்கியம் நாம் பெருவிட்டால் நமது தேசசஞ்சாரம் பயனற்றதாகும்.

மது:-உத்தமி இறந்தனள்.

இங்கி:-ஐயா, என்ன சொல்லுகிறீர்கள்.

மது:-உத்தமி இறந்தனளென்று சொல்லுகிறேன்.

இங்கி:-உத்தமி!

மது:-இறந்தனள்.

இங்கி:- நல்ல வேளைதான் தெய்வங்களுக்குத் தேங்காய் உடையுங்கள். ஒருவன் மனைவியைத் தெய்வங்கள் விருப்புடன் அகற்றுவதால் அவைகள் மனிதர்களுக்கு உடை தைக்கும் தையற்காரரெனத் தோன்றுகின்றன. பழைய உடை கிழிந்தால் புதிய உடை ஏற்படுத்தளிப்பதுபோல் புது மனைவியை அடையச் செய்து ஆனந்தத்தை அளிக்கின்றன. உத்தமி ஒருத்தியே உலகின் பெண்ணாகுல் உமது நஷ்டம் கஷ்டமேயாம். பின்னது பரிதபிக்கத்தக்கதே. இப்பொழுது வந்திருக்கும் துக்கமோ மனக்குளிர்ச்சியெனும் மகுடம் சூட்டுகின்றது. பழைய கச்சையை அகற்றி புதிய கச்சை அளிக்கின்றது. இதற்குக் கண்ணீர் வடிப்பதாயின் கண்ணில் வெங்காயத்தைப் பிழிந்துகொண்டுதான் வடிக்கவேண்டும்.

மது:-இச்சமயத்தில் அவள் தொடங்கியிருக்கும் காரியத்தை நோக்குமிடத்து நானிங்கிருப்பது தகுதியற்றதாகும்.

இங்கி:-தாம் இங்கு தொடங்கியிருக்கும் காரியம் தம்மை யகலவிடாதே. முக்கியமாக மானினி காரியத்தை நோக்குமிடத்து தாமிருந்தே தீரவேண்டும்.

மது:-இனி பரிகாச வார்த்தைகள் வேண்டாம். நாமெங்ஙனிருப்பதை நமது அதிகாரிகளுக்குத் தெரிவிக்கக் கடவாய். நாம் கிளம்பிச்செல்லவேண்டியதற்கான காரணத்தை இராசாத்திக்குத் தெரிவித்து அவள் மனம் தளர்ந்து விடையளிக்குமாறு செய்துவருகிறேன். என்னைக் கிளம்பச்செய்யும் காரணம் உத்தமியின் மரணமும், பின்னும் எனக்கேயுள்ள வேறு காரியங்களும் மாத்திரம் அல்ல, நமக்காக ரமணபுரியில் இரகசியமாக வேலைசெய்துகொண்டிருக்கும் நேசர்களும் நம்மை வரச்சொல்லியழைக்கின்றனர். சித்திரருபன் வருணாசலனைப் போருக்கழைப்பதுடன் சமுத்திர சண்டையில் இளையற்று நிற்கின்றான் நமது ஜனங்களோ, தகுந்தவனிடத்தில் அவன் தகுதி சிதையும் வரையில் தமது அன்பைக் காட்டுவதில்லை. அத்தகைய நமது நிலையற்ற ஜனங்கள் சித்திரருபனை அவன் தந்தையாகப் பாவித்து அத்தந்தையின் கௌரவத்தையும் அவனுக்களிக்கின்றனர். அவனும் சிறந்த பெயருடனும், வல்லமையுடனும், பெயரையும் வல்லமையையும்விட மேன்மையானக் குடிப்பிறப்புடன் நல்வாழ்க்கையுடனும் விளங்கி சத்துவீரனாக நிற்கின்றான். இவ்வாறு அவனிருக்க விட்டுவிடுவோமாயின் உலகமே ஆபத்துக்கமாறுகின்ற அபாயம் நேரிடும். இப்பொழுது ஏராளமான விஷயங்கள் நடந்து வருகின்றன, இவைகள் இன்னும் கெடுதிசெய்யும் தன்மையுறவில்லை, அவைகள் நீரில் இடப்பட்ட குதிரைமயிர் சர்ப்பத்தின் தன்மையடைவதுபோல் உயிர் மாத்திரம் அடைந்து இன்னும் கெடுதிசெய்யும் விஷம்பெறவில்லை. நமது ஊழியர்களிடம் நாமிவ்விடம்விட்டு வெகுசீக்கிரம் புறப்படுகின்றோம் என்ற நமது சித்தத்தைத் தெரிவிக்கக்கடவாய்.

இங்கி:- அப்படியே செய்கிறேன்.

(சென்றுவிடுகின்றனர்)

(தொடரும்.)

தொண்டர்.

(ஸ்ரீமான் வை. சா. வேங்கடராமய்யர்)

முன்னுரை.

தொண்டர்க் கியைபுகழைத் தூயதமி ழால்விரித்து
மண்டலத்தி னோர்க்கு மகிழ்ந்துரைப்பான்--பண்டுபெரும்
பாரதத்தை யாய்ந்தே பரிந்துயர்கோட் டால்வரைந்த
காரணன்கால் எற்கருள்செய் காப்பு.

"அரிது அரிது மானிடர் ஆதல் அரிது." இம்மனிதப்பிறப்பு அருமையாவதற்குக் காரணம் பல. அவற்றுள் மிக மிகச் சிறந்தது ஆராய்ந்தறியும் ஆறாவது அறிவைப்பெற்றிருப்பதே. இந்த அறிவு அயலார்க்கு ஊழியம் புரிந்து இன்புறுவதால் விளக்கமுறுவது. 'அயலார்க்கு உதவி புரியவே உடல் தரப்பட்டது' என்பது வடநூற் கருத்து. இதுவே ஏனையமொழி நூல்களுக்கும் உடன்பாடாம். அவை பின்னர் விரிக்கப்பெறும். மேலும், 'வளம்பட வேண்டாதார் யார்யாருமில்லை' என்றபடி அனைவரும் இன்புறவே முயலுவர்; முயலுமவர் அனைவருமே அங்ஙனமேதான் ஒரு சமூகம் நாடு முதலியனவும் அத்தகைய இன்பம் சுதந்தர புருஷர்களுக்கும், அத்தகைய மக்களைக் கொண்ட சமூகத்திற்கும், நாட்டிற்குமே கிடைக்கக்கூடியது. அந்தச் சுதந்தரமோ 'தன்கையே தனக்கு உதவி' என்ற கொள்கையைக் கடைப்பிடித்து ஒழுகுபவர்க்கே கைவரக்கூடியது. இக்கொள்கையினை மேற்கொள்ளுமாறு தூண்டிப் பொது ஜனங்களிடை உழைப்பது ஒன்றையே தமக்குரிய கொள்கையாகக் கொள்ளவேண்டியவர் "தொண்டர்" ஆதலின் ஈண்டுத் 'தொண்டர்' என்ற தலைப்பின்கீழ் சில கூறப்படுகின்றன. "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்பது தேவாரப் பெரியாரது திருவாக்கு.

தொண்டராவார் யாவர்?

தொண்டுபூண்டு ஒழுகுபவர் தொண்டரெனப்படுவார். தொண்டு, பழமை, ஒன்பது, பணி, ஊழியம் என்பன ஒரு பொருளன. இம்முறையில் தொண்டர் பலவகையினர் ஆவர். எனினும், இங்கே கூறப்படுவது பணி என்ற பொருளைப்பற்றியே. ஏனெனில், பணி தலைமேற்கொண்டு ஒழுகுபவரே இம்மை, மறுமை என்ற இரண்டு இடங்களிலும் புகழ், இன்பம் என்ற நன்மைப்பேறுகளைப் பெறுதற்கு உரியர் ஆதலின் என்க. இதனால் ஈண்டு தலைமொழியால் குறிக்கப்படுவர் ஆண்டவனுடைய படைப்புக்களும், அவன் உவந்து உறையும் திருக்கோயில்கள் ஆகிய நடமாடுங் கோயில்கள் எனப்படும் உயிர்களும் மகிழ்ந்து இன்புறுமாறு அவற்றிற்குத் தொண்டு பூண்டு ஒழுகுதலையே தமக்கு உரிய பெருங்கடமையாகக் கொண்டுள்ள முழு மனிதர் என்பது போதரும். தொண்டர் - சமூக ஊழியர்.

தொண்டர் இயக்கம் தோன்றிய முறைமை.

"உலகம் ஒரு காலத்திலே நாடு, காடு என்ற வேறுபாடு இன்றியே இருந்ததாக வைத்துக் கொள்வோம். அக்கால் மக்களாவார் விலங்குகளுடன் ஒன்றுகூடிவாழ்ந்துவரலாயினர். அந்நிலையில், மக்களாவார் விலங்குகளால் துன்புறுவாராயினர். அத்துன்பத்தினின்றும் விடுபடுவதற்கு முயலவேண்டியது அவர்களது இன்றியமையாக் கடமையாயிற்று. அக்கடமையை உணர்ந்த அன்னார்முதற்கண் மரம் கிளைகளாலும், இலைகொடிகளாலும் குடிசைகள் எனப்படும் சிறுச்சிறு வீடுகளை அமைத்துக்கொள்வாராயினர். (விலங்குகளின் தொல்லைகளினின்றும் விடுபட அமைத்துக்கொண்ட இடமாயினமையின் அது வீடு எனப்பட்டதுபோலும்.) இங்ஙனம் விடுபடமுயன்றும்

அங்கும் அவர்களுக்கு விலங்குகளின் தொல்லை நீங்கினபாடில்லை. கண்ட அன்னார் அங்கிருந்தும் வேறு இடத்தை நாடிவரலாயினர். [இங்ஙனம் நாடிவந்த இடம் நாடு; நகர்ந்து கண்ட இடம் நகரம்; ஊர்ந்து சென்ற இடம் ஊர் என ஆயினபோலும்.]" என்றும் வைத்துக்கொள்வோம். இங்ஙனம் உலக வாழ்க்கை வளர்ந்திருக்குமாயின் "தன் கையே தனக்கு உதவி" என்ற சிறந்த கொள்கையும், அங்ஙனம் தற்காப்பினைச் செய்துகொள்ளும் திறமையினைப் பெற்றிராதவர்களுக்கும் இழந்தவர்களுக்கும் போதிய உதவிகளைச் செய்து காக்கவேண்டிடியது. ஏனைய தகுதியாளரது தவறாக் கடமையே ஆகும் என்ற உணர்ச்சியும், உணர்ந்தவற்றை உணர்ந்தவாறே செய்கையில் செய்து காட்டும் திறனும் எவ்வளவு பழமையனவாக இருத்தல் வேண்டும் என்பது ஒரு வகையிற் புலனாம். இவ்வாறு கூறுவது முற்றும் மறுத்து ஒதுக்கக்கூடியதொன்றன்று என்பது, மக்களினும் குறைந்த அறிவினை உடையன எனக் கருதப்படும் விலங்கு, பறவை முதலாயின தம்மைத்தாமே காத்துக்கொள்வதாலும், அத்தகைய ஆற்றலினைப் பெற்றிராத தம்முடைய இனங்களைப் போதிய உதவிகளைச் செய்து காத்து வருவதாலும் இனிது ஆராய்ந்து அறியப்படும். "அவசியமே புதிய தோற்றங்களுக்கு அன்னையாவது" என்ற ஆங்கிலத்தொடரின் கருத்தும் இங்கே அறியத்தக்கது. அன்றியும், நமது நாட்டுச்சான்றோர் பலரது கருத்துப்படி ஒவ்வொருவரும் காலையில் படுக்கையைவிட்டு எழுங்கால் அயலாரது முகத்தில் விழிக்காது ஆண்டவனை வழுத்தித் தத்தம் கைத்தலங்களைப் பார்த்துக் கொள்வதையே மிக உயர்வாகக்கருதுவதாலும் இக்கருத்துப் பழமையானதே என்பது விளங்கும். இவை இன்றைக்கும் நம்மவரால் அறியப்படுவன. இங்ஙனம் நோக்கப் பண்டைக்காலத்தில் மக்களாவார் ஒவ்வொருவரும் இக்காலத்துச் சிறப்பாகக்கூறப்படும் "சமூக ஊழியர்" என்ற பொருளுக்கு உரிய பெருமை வாய்ந்த தொண்டர் ஆகவே தங்களது வாழ்க்கையை நடத்தி இருத்தல் வேண்டும் என்பதும், அம்முறையில் தொண்டரது இயக்கம் தோன்றிய முறைமையாங்ஙனம் இருத்தல் கூடும் என்பதும் ஒரு சிறிது விளங்கும் என்பது தவறாகாது.

இக்காலச் சாரணர் இயக்கம்.

இங்கிலாந்து வாசியான ஸர் ராபர்ட்பேடன் பவல் என்னும் ஆங்கில தளகர்த்தருக்கு இன்றைக்குப்பதினெட்டு (1908) ஆண்டுகளுக்கு முன்னர்த் தென்னாப்பிரிக்காவிலே போயர்களுடன் போர் புரிய வேண்டி வந்தது. அக்கால் அவர் தமக்குப் பல திறமைவாய்ந்த சிறுவர்களது உதவி இன்றியமையாததாக இருந்தமையை உணர்ந்தார்; பல சிறுவர்களை ஒன்று சேர்த்துத் தமது கருத்தின்படியே பழக்கினார்; அம்முறையில் அவர் ஒரு சிறிது வெற்றியையும் பெற்றார், இதன் பயனாகத் தோன்றியது தான் இக்காலத்தில் "வாலிபச்சாரணர் இயக்கம்" என்ற பெயருடன் யாண்டும் போற்றப்பட்டு வருவது. இதுவே இப்பொழுது பல கலாசாலைகளிலும் கற்கின்ற சிறுவர்களுக்குக் கற்பிக்கப்படுவது. இந்த முறையிலே கற்பிக்கப்படும் நீதிகளும் பிறவும் நம்மவர்க்குப் புதியன ஆகா என்பது சிறிது ஊன்றி நோக்குவார்க்கும் இனிது விளங்கும். "நன்றிஅறிதல் பொறையுடைமை இன்சொலோடு-இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை. கல்வியொடு-ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை-நல்லினத்தாரோடு நட்டல் இவை எட்டும்-சொல்லிய ஆசார வித்து." என்ற ஆசாரக்கோவையின் முதற்பாட்டே போதியதாம். ஸ்ரீராமலட்சுமணர்கள் காட்டிலே வாழ்ந்து வந்த முறைகளையும், பரதன் ஸ்ரீராமபிரானை நாட்டிற்கு அழைத்துப்போக வருங்கால் அடையாளங் கண்டு செல்லுவதாகக் கூறும் மொழிகளையும் காட்டும் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணப்பகுதியும் சேர அறியத்தக்கதாம். நிற்க, இம்முறையுள்ளும் பல அரிய நீதிகள் கற்பிக்கப்படுகின்றன. இம்முறைப்படி ஓர் ஊழியச்சிறுவன் பிறர்க்கும், தனது நாட்டிற்கும் தன்னால் இயன்ற அளவு உதவிபுரியத் தயாராக இருக்கவேண்டியவனாகின்றான். அவன் யாண்டும் தன்னம்பிக்கையுடன் இருக்கவேண்டியவன்; எவரையும் உடன் பிறந்தவராகவே கருதவேண்டியவன்.

தொடரும்.

பர்மா மாகாணத்தில் கிராமத்தலைவர்களின் வரும்படி.

இதுகாறும் கிராமத் தலைவர்களுக்கு அவர்கள் வசூலிக்கும் கிஸ்தியிலிருந்து ஒரு பாகத்தையே சம்பளமாக கொடுத்துவருகிறார்கள். இப்படி செய்வது உசிதமில்லையென்று ஸர்க்கார் கண்டு இவர்கள் சம்பளத்தை மாற்றுவதற்கான யோசனைகள் சில பிறப்பித்திருக்கிறார்கள் முக்கியமாய் இவர்களின் வரும்படி வருஷாவருஷம் ஆட்களின் குறைவினால் அதிகப்பட்டுக்கொண்டு வருகிறது இருந்தபோதிலும் வருகிற சம்பளம் தற்காலங்களுக்குநாள் அதிகரித்து வரும் செலவுக்குப் போதுமானதாயில்லை. தவிர எல்லா ஜில்லாவிலும் ஒரே சம்பளமில்லை, சிலருக்கு அதிகமான வேலையில்லை மற்றும் சிலருக்கோ வேலை மிக்க கடுமையாயிருக்கிறது. இதையெல்லாம் உத்தேசித்து இவர்கள் எல்லோருக்கும் சம்பளத்தை கிட்டத்தட்ட ஸமமாகச் செய்யவும், சம்பளத்தையும் அதிகப்படுத்தவேண்டுமென்றும் எண்ணியிருக்கிறார்கள். தற்காலம் ஷ்வேபோ ஜில்லாவில் ஒரு கிராமத் தலைவருக்கு ரூபா 304ம், கத்தா ஜில்லாவில் ரூபா 94ம் கிடைத்திருக்கிறது. இதை நீக்கி மேல் பர்மாவில் வேலைசெய்யும் கிராமத் தலைவர்களுக்கு வருஷத்துக்கு ரூபா 300ம், கீழ்பர்மாவிலுள்ளவர்களுக்கு வருஷத்துக்கு ரூபா 240ம் கொடுப்பது அதிகமில்லை என்று கருதுகிறார்கள். இப்படிச்செய்வதானால் தற்காலம் இவர்களுக்கு கிஸ்தித்தொகையிலிருந்து கிடைக்கும் வரும்படியை அதிகப்படுத்துவதாகும். ஆனால், அவ்வாறு செய்யாமல் பல கிராமங்களை ஒன்றுசேர்த்தும், தர்க்காஸ்து நிலங்களைக் கொடுத்தும், நல்ல வேலைக்காக வருமானம் செய்தும் விசேஷ காரியங்களுக்காக இனாம் முதலியவைகள் கொடுத்தும் இவர்கள் வருமானத்தை உயர்த்தப் போகிறார்கள். மேற்கண்ட வழியின் பிரகாரம் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு தூரம் பிரயோகப்படுத்தலாம் என்பதும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதலாவது திக்குக்கொன்றாய் கிடக்கும் நிலங்களை ஒன்றுசேர்த்து ஒரு தலைவரின் மார்பத்தில் விடவேண்டும் இது சிலருக்கு விருப்பமில்லாவிடினும், கிராம பரிபாலனத்தை நன்கு நடப்பிக்கக்கூடிய மனிதர்களின் முன்வருகைக்கு ஏதுவாகும். இரண்டாவது தர்க்காஸ்துக்கொடுப்பதாவது ஒருவர் அதிகாரத்துக்குட்பட்ட எல்லைக்குள் ஏக்ரா 25க்குமேல் இருக்கக்கூடாது. சில இடங்களில் இதை மாற்றலாம். இச்செயல் ஹெடியார்களின் அந்தஸ்தை அதிகப்படுத்துப்பொருட்டே. மூன்றாவது குற்றங்களைக்குறைக்கும்பொருட்டும், குற்றவாளிகளைப் போலீஸார் கைவசப்படுத்தும்பொருட்டும், இவர்கள் செய்யும் உதவிக்காக இனாம் கொடுக்கவேண்டும். கடைசியாய் விசேஷ இடங்களில்போய் வேலைசெய்வதற்காகவும், ஊரைவிட்டு வேறு இடங்களுக்குப்போய் அலைந்து திரிந்து வேலை செய்வதற்கும் ஒருவிதமான படியும் இப்பொழுது கொடுக்கப்படுகிறதில்லை. இதனால் இவர்களுக்கு தேகசிரமமும் கையைவிட்டுப் பணச்செலவும் ஏற்படுகிறது. இதை நிவர்த்திக்க இத்தலைவர்களுக்கு இம்மாதிரி காரியாதிகளுக்குத்தக்க இனாம் கொடுக்கவேண்டும். மேற்கண்ட யோசனைகள் அடங்கிய தீர்மானம் ஒன்று கிராம நிர்வாக டிபார்ட்மெண்டாரால ஆகஸ்டு மாதம் 3ந்தேதி கொண்டுவரப்பட்டு கவர்னரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

கிராம உத்தியோகஸ்தர்களுக்கு இடவசதி.

சிவகங்கை தாலூகா கிராம உத்தியோகஸ்தர்கள் தாலூகாவுக்கு வருங்காலத்தில் தங்குவதற்கு சிவகங்கை தாலூகா கச்சேரிதெருவில ஒரு வீடு தனியாக அமர்த்தப்பட்டு அதில் ஒரு குமாஸ்தாவும் நியமிக்கப்பட்டிருக்கிறார். கிராம உத்தியோகஸ்தர்கள் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் இது இன்றியமையாததாகும். மற்ற தாலூகா சங்கங்களும் இம்மாதிரி ஏற்பாடுசெய்தால் சங்க அபிவிர்த்திக்கும் இடமுண்டாவதோடு அடிக்கடி தாலூகா தலைநகரத்திற்கு வருகிற கிராம உத்தியோகஸ்தர்கள் ஒருவரோடொருவர் சந்தித்துக்கொள்ளவும் அபிப்பிராயங்களை மாற்றிக்கொள்ளவும் அன்பும் ஒற்றுமையும் அதிகரிக்கவும் வசதி ஏற்படும்.

பாரத் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனி,

லிமிடெட், ஹெட் ஆபீஸ், லாகூர்

1896ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

—:x;—

(Four Fold Benifit scheme a speciality.)

நான்குவித லாபங்கள் தரக்கூடிய விசேஷ பாலிஸிகள் கொடுக்கப்படும்.
மற்ற விபரங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

பிராஞ்சு செக்ரிடரி,
மதுரை.

N. S. வெங்கிடாச்சாரி,
சீப் ஏஜண்டு, காவேரிக்கரைத்தெரு; கும்பகோணம்.

T. S. கணபதி சாஸ்திரிகளின் ஆயுர்வேத ஔஷதங்கள்.

மகா பில்வாதி முதலான லேஹ்யங்கள், தைல வகைகள், பஸ்ம செந்தூரங்கள், ரஸாயனங்கள், கிருதங்கள்முதலிய மருந்துகள் இவ்விடத்தில் சாஸ்திரியமாக செய்யக்கூடியதும் இவ்விடத்தில் பச்சிலை மூலிகைகள் அகப்படாததற்கு மலையாளமிருந்து வரவழைக்கப்பட்டுச் செய்ததுமான மருந்துகளை ஆஸ்திகர்களாயுள்ள நம்நாட்டுப் பிரமுகர்கள் ஒரு தடவை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்.

விலை முதலிய மற்ற விபரங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

விலாசம்,
T. S. கணபதி சாஸ்திரிகள்,
லெக்ஷ்மி விலாஸ் அக்ரஹாரம்
கும்பகோணம்

ஸ்ரீ பாலானந்த பற்பொடி.

இது பல்வலி, பல் ஆடுதல், இரத்தம் வடிதல், பல் கூச்சம், பல் சொத்தை இவைகள் சௌக்கியமாகும். தவிர நீர்க்குத்தல் நீர் எரிச்சல், வெட்டை புண், வயறுகடுப்பு, இரத்தக்கடுப்பு, மூலக்கடுப்பு, இவைகளுக்கு ஆட்டுப்பால் அல்லது எருமைத்தயிரில் மேற்படி பற்பொடியைக் கலந்து, சாப்பிட்டால் ஒரே வேளையில் அனுகூலப்படுத்தும்.

மூன்று மாதம் உபயோகிக்கக்கூடிய டப்பி 1க்கு
விலை அணு 4

அஷ்டகுல்ம ஸர்வரோக நிவாரண யௌவன லேகியம்.

இதன் விலை ஒரு சேர் டப்பி 1க்கு ரூபா 4—0—0

நேத்திரானந்தத் தைலம்.

இதன் விலை ஒரு சேர் டப்பி 1-க்கு ரூபா 4—0—0

குறிப்பு:—காசரோகம், குஷ்டம் முதலிய மகாவியாதிகள் நிவர்த்தியாகும் அருமையான மருந்துகள் கிடைக்கும். ஏழைகளுக்குத் தர்ம வைத்தியம். கமிஷன் ஏஜண்டுகள் தேவை

V. பாலு அண்டு ஸன்ஸ்,
எலந்துறை, திருவிடமருதூர் போஸ்டு

Balachandra Tooth Powder.

பாலச்சந்திர பற்பொடி.

20-வருஷகாலமாய் உபயோகத்தில் உள்ளது.

கல்நார்பஸ்பம் முதலிய சுதேச அவுஷத முறையையும் கார்பாலிக் ஆஸிட் முதலிய இங்கிலீஷ் முறையையும் அநுசரித்து அநேக சரக்குகளைக்கொண்டு மிகுந்த பிரயாசையுடன் தயார் செய்யப்பட்டிருக்கிறது. அநேக கனதனவான்கள், டாக்டர்கள், உத்தியோகஸ்தர்கள், வக்கீல்கள், வியாபாரிகள், முதலானவர்களால் நன்குமதிக்கப்பட்டு நற்சாக்ஷி பத்திரமும் அளிக்கப்பட்டிருக்கிறது.

பல் ஊற்றையை போக்கும்,
பல்லை வெளுமையாக்கும்.
பல்வலியை தீர்க்கும்.
பல்ஆட்டத்தை நிறுத்தும்.
வாய் நாற்றத்தை தொலைக்கும்.
பரிமள வாசனையை கொடுக்கும்.
பல்லிலுள்ள கூச்சத்தை நிவர்த்திக்கும்.
பல்லை கெட்டிப்படுத்தும்
பல்லில் ரத்தம்வராமல் தடுக்கும்.

பல் சம்பந்தமாய் உள்ள சகல வியாதியையும் போக்கி பல்லை நிலை நிறுத்தக்கூடிய அருமையான குணங்களடங்கியதும் சுமார் 3-மாசத்துக்கு உபயோகிக்கக்கூடியதுமான டப்பி 1-க்கு அணு 3-தான்.

ஜாஸ்தி லாபத்தை அபேக்ஷிக்காமல் விலை உயர்ந்த சாமான்களைக்கொண்டு அருமையாய் தயார்செய்யப்பட்டிருக்கிற இந்த பாலசந்திர பற்பொடியை சிறுவர்கள் முதல் ஆண் பெண் சகலமானவர்களும் உபயோகித்து குணமடைவதுடன் இச்சிறு கைத்தொழிலையும் ஆதரிக்கவேணுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வியாதி வந்தபின் வைத்தியனை தேடுவதைவிட வியாதியே வராமல் தடுப்பதுதான் முக்கியமானது.

டப்பி 1-க்கு	0—3—0
டப்பி 6-க்கு தபால் சார்ஜ் உள்பட	1—4—0
டப்பி 12-க்கு Do	2—4—0

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.
வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர், கிராமானுகூலன்
மருதாந்தநல்லூர், திப்பராஜபுரம் போஸ்டு.

மனத்தின் ஊற்று! வாசனையின் வீடு!!

பரிமளப் பொக்கிஷம்

எது?

கும்பகோணம் பெரியகடை வீதி

K. அப்துல் ரஹிமான் ஸாஹிப் & ஸன்ஸ்,

பரிமளச் சாலை.

எமது பரிமளச்சாலையில் பரிமள வாசனைத்திரவியங்கள் எமது முன்னோர்களின் முறைப்படி அநுபவம் வாய்ந்த காங்களால் தயார்செய்து வழங்கப்பட்டுவருகிறது யாவரும் அறிந்ததே. எமது பரம்பரை வியாபாரப் பெருமையும், சாமான்களின் உயர்ந்த மணமும் அரசர்கள் ஜமீன்தாரர்கள், பிரபுக்கள், உயர்தர உத்தியோகஸ்தர்கள் மற்றைய கனவான்கள் பலராலும் கொண்டாடத்தக்கது என்பது ஒரு முறை வாங்கி அநுபவித்தவர்களுக்கு நன்கு விளங்கும். எம்மிடமுள்ள சகல பரிமளச்சாமான்களும் முனிசிரேஷ்டரான டேப்பிக் சக்கரகுஞ்ச் அலலியா அவர்களால் தயாரிக்கப்பட்டு அநுபவசித்திபெற்றன. எமது முன்னோர்கள் டில்லி அக்பர் சக்கிரவர்த்தியாருக்கும், தஞ்சை மன்னர்பிரானுக்கும் பரிமளப் பொருளை வழங்கினோர்களென்பதையும், அம்முறைப்படியே நாம் இப்பொழுதும் தயாரித்து வருகிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். [கேட்லாக் இனாம்.]

கவனியுங்கள்! போலி சரக்குகளை வாங்கி ஏமாறாதீர்கள்!!

தென்னிந்தியா தேசவுசாலை,

கும்பகோணம்.

பலவிதமான டவல்கள், சர்ட்டிங் பீஸ்கள், தோத்தி வகையறாக்கள் ஷை தேசவு சாலையில் தயாராகின்றன. மேற்கண்ட **S. R. S.** டிரேட் மார்க்குள்ள சரக்குகளையே கவனித்து வாங்குங்கள். நாணயத்திற்கும் உறுதிக்கும் உத்தரவாதமுள்ளதாயிருக்கும். டிரேட் மார்க்கில்லாத சரக்குகளை வியாபாரிகள், **S. R. S.** டவல் என்று சொன்னால் நம்பி மோசம்போகாதீர்கள். ஷை தேசவுசாலையிலேயே கதர் வேஷ்டிகளும் கதர் துண்டுகளும், கதர்சட்டை பீஸ் தினுசுகளும் தயாராகின்றன.

S. R. சுந்தரமய்யர்,
ப்ரொப்ரைட்டர்.

Printed at the Sri Kamakshi Amman Press and Published by N. Apathsagaya Aiyer at Kumbakonam